பக்கங்கள்: 08

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 28 செவ்வாய்க்கிழமை 11.04.2023 கதிர்152

## 2030 வரை ரணில் ஆட்சி ஆசைப்படும் பண்டார

2030 வரையில் ரணில் ஆட்சியில் தொடர்ந்தால் நாட்டுக்கு சிறப்பான எதிர் காலம் தோற்றம் பெறும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் திங்கட் கிழமை செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:,

கடந்த மே மாதம் எமது கட்சியின் தலைவர் ஓட்டைச் சட்டியொன்றையே கையிலெடுத்தார். பொருளாதாரம் மிகமோசமாடைந்திருந்தது. நாடு வங்குரோத்து அடைந்திருந்தது.

இனங்களுக்கு இடையில் குழப்பங்கள், நீண்ட வரிசைகள் என்று எங்கு பார்த்தாலும் பிரச்சிகைள் நிறைந்த நாடொன்றையே அவர் பொறுப்பேற்றிருந்தார்.

தற்போது குறுகிய காலமொன்றுதான் ☞2

## நாணய நிதிய ஒப்பந்தத்தின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்

### ஜனாதிபதி இப்படி நம்புகிறார்

சர்வதேசநாணயநிதியத்துடன் இந்த ஆட்சி செய்துகொண்ட ஒப்பந்தம் வாயிலாக நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்ற புதிய எதிர்பார்ப்புதோன்றியுள்ளனஎன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

நுவரெலியாநகர அபிவிருத்தி தொடர்பில் நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நுவரெலியா மாவட்டத்தை நோக்கி வரும் சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து வருடம் முழுவதும் சுற்றுலாப் பிரயாணிகளின் வருகையை அதிகரித்துக்கொள்ளுவதற்கான கண்கவர் நகரமாக அதனை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது.

நுவரெலியா நகரத்திற்குள் மழைநீர் வழிந்தோடுவதற்கு அவசியமான வேலைத்திட்டம் ஒன்று இல்லாமை நீண்டகால பிரச்சினையாக உள்ளது. அதற்குத் தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டத்தை விரைந்து நடைமுறைப்படுத்துதோடு, குடிதண்ணீர்ப் பிரச்சினைக்கான தீர்வுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

நுவரெலியாநகரத்தில் முறையற்ற விதத்தில் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு மாறாக உரிய திட்டமிடலுக்கமைய கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். பெரும்கட்டடங்களை நிர்மாணிப்பதால் நகரம் சீரழிவுக்கு உள்ளாவ ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச, பதவியில் இருந்த விரட்டியடிக்கப் பட்ட பின்னர், முன்னாள் ஜனாதிபதி என்கிற வகையில் பௌத்தலோகா மாவத்தையில் உள்ள அரச உத்தியோகபூர்வ இல்லத்தில் வசித்து வருகிறார். அந்தப் பகுதி மிகவும் சத்தம் சந்தடி மிக்கது என்பதால் அவர் அங்கிருந்து வெளியேற விரும்பினார்.

தனக்கு புல்லர்ஸ் மாவத்தையில் உள்ள அரசஉத்தியோகபூர்வ இல்லத்தைத்தருமாறு அவர் பல தடவைகள் இந்த ஆட்சியிடம் கோரிக்கை முன்வைத்திருந்தார். ஆனால் ஆட்சியாளர்கள் அதனைக் கருத்தில் எடுக்கவில்லை. புல்லர்ஸ் மாவத்தை வீட்டில்தான் மகிந்த ராஜபக்ச இதுவரை வசித்து வந்தார். அண்மையில்தான் அவர் அங்கிருந்து வெளியேறி விஜயராம மாவத்தையில் உள்ள வீட்டிற்குக் குடிபெயர்ந்திருந்தார்.

மகிந்தவசித்தவீட்டையேதனக்குத் தருமாறுகோட்டாபயஆட்சியாளர்களிடம் ☞2

## ஓகஸ்டில் தேர்தல்?

### இன்று கூடுகிறது ஆணைக்குழு

தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கூடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புதிய தேர்தல் திகதி தொடர்பில் இந்தக் கூட்டத்தில் முடிவெடுக்ககப்படும் என்று தெரிகிறது. அனேகமாக ஓகஸ்ட் மாதம் தேர்தலுக்கு நாள் குறிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் தினேஷ்குணவர்த்தனவுடன் தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் திங்கட்கிழமை சந்திப்பு நடத்திய நிலையில், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் மீண்டும் ஒரு உத்தியோகபூர்வமான அறிவிப்பை விடுப்பதற்காகவே இந்த கூட்டம் நடைபெறவுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் தொடர்பில் தீர்க்கமான முடிவொன்று எடுக்கப்ப ☞2

## பயனற்ற அமைச்சரின் சந்திப்பு

ந.லோகதயாளன்.

வெடுக்குநாறி ஆலய விவகாரம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினர் திங்கட்கிழமை பௌத்த சாசன மற்றும் தொல்லியல் துறை அமைச்சர் விதுரவிக்கிரம நாணயக்காவையும் சந்தித்து கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பு பயனற்றதாக அமைந்தது என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தார்.

வெடுக்குநாறி ஆலய விக்கிரகங்கள் அழிக்கப்பட்டதனால் அவற்றினை மீளவும் அதே இடத்தில் பிரதிஸ்டை செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையினையே நிர்வாகத்தினர் அமைச்சரிடம் முன்வைத்தனர்.

‘‘எமது கோரிக்கைகளைக் கேட்ட அமைச் சர், தொல்லியல்த் திணைக்களத்தின் வழக்கு நிலுவையில் உள்ளபோது உடனடியாக எதனையும் மேற்கொள்ள முடியாது என அதிகாரத் தேரணையில் ☞2

# ஏப்ரல் 25 தேர்தல் நடப்பது கடினம்

### இராஜங்க அமைச்சர் ஜனாக வக்கும்பர தெரிவிப்பு

- பிரதமருடனான பேச்சில் இறுதி முடிவில்லை
- நிதி அமைச்சருடன் விரைவில் கலந்துரையாடப்படும்
- தேர்தலை நடத்துவதே ஆட்சியாளர்களின் நோக்கம்
- வேட்பாளர்களான அரச ஊழியர்களுக்கு கொடுப்பனவு

(தன்வீன்)

தேர்தல்கள் ஆணைக்குழு இரண்டாவது தடவையாக உள்ளூராட்சிமன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்காக அறிவித்த ஏப்ரல் 25 வாக்களிப்பு இடம்பெறுவது கடினம் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்பர தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழுவினன் உறுப்பினர்களுக்கும், பிரதமர் தினேஷ் குணவர்த்தன உள்ளிட்ட விடயதானத்துக்குப் பொறுப்பானவ அரசியல்வாதிககளுக்கும் இடையில் திங்கட்கிழமை பிரதமர் அலுவலகத்தில் இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்ளூராட்சிமன்றங்களுக்கானதேர்தலை

## பெரமுனவுக்குக் கடவுளின் சாபம் அதனால்தான் ஐ.தே.கவுடன் கூட்டு

### ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. தெரிவிப்பு

பொது ஜன பெரமுனவுக்கு இறைவனின் சாபம் கிடைத்துள்ளதாக தெரிவித்துள்ளஐக்கியமக்கள்சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, தமது கட்சியிலிருந்து ஓரிருவர் அரசு பக்கம் தாவக்ககூடும் என்றும் கூறியுள்ளார்.

கொழும்பில் உள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தல்கள்ஆணைக்குழு பிரதமரைச் சந்தித்துள்ளது. இந்தச் சந்திப்பின்போது அவர்கள் உள்ளுராட்சி மன்றங்களுக்கான நிதியை வழங்க வேண்டும் என்பதையே வலியுறுத்தியிருக்கவேண்டும். அதனை அவர்கள் செய்திருப்பார்கள் என்று நம்புகின்றேன். அவர்களின் முடிவு நாளை வெளியிடப்படவுள்ளது.

அதேநேரம், பொது ஜன பெரமுனவினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும் பொது வேட்டபாளராக ரணில் விக்கிரமசிங்க களமிறங்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. பொது ஜன பெரமுனவுக்கு கடவுளின் சாபம் கிடைத்துள்ளது. தமது கட்சியில் தலைவர்கள் இல்லாது, மக்கள் வாக்குகளற்ற ஐக்கிய தேசியக் கட்சியுடன் அது கைகோர்கின்றது.

ஐக்கியதேசியக்கட்சியின் வாக்களர்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடனே யே உள்ளனர். அவர்கள் தொடர்ந்தும் எம்முடனேயே இருப்பார்கள். எமதுகட்சிஒற்றுமையாகவும் பலமாகவும்தேர்தலை ☞2

## நாட்டின் குதூகலம் தற்காலிகமானது

### சுதந்திரக் கட்சி பதில் செயலர் கருத்து

சர்வதேசநாணயநிதியத் திடம் உதவி பெற்று பொருளாதாரமீட்சிகண்டநாடுஎன்று உலகில் எதுவுமே இல்லை, நாட்டின் தற்போது காணப்படும் குதூகலம் தற்காலிக மானது என்று ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் சரத் ஏக்க நாயக்க தெரிவித்தார்.

மத்திய மாகாணத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றின்போது செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது ஒரு விதமான குதூகலம் காணப் படுகின்றது.

சர்வதேச நாணய நிதியம் கடன் உதவி அளித்து விட்டது. நாடு பொரு ளாதார ரீதியாக மீட்சி அடையப் போகின்றது என்பது தான் அந்த குதூகத்திற்குக் காரணம். அந்தக் குதூகலம் சொற்ப நாளைக்கானதே. வயிற்றுக்கோளாறுடைய நோயாளிக்குச் சிகிச்சை வழங்கப்பட்டபோது வயிறு சுத்தமாகியது. நோயாளி உயிரிழந்தார் என்ற நிலைமைதான் இறுதியில் ஏற்படப் போகின்றது.

சர்வதேசநாணயநிதியத்தின் உதவிபெற்றஎந்தவொரு நாடும் உலகில் பொருளாதார மீட்சி பெற்றது என்று கூற முடியாது. அவ்வாறு எந்தவொரு உதாரணமும் இல்லை. ஆகவேசொற்பநாள்குதூகலத்தின் பின்னர் நடக்போவதை தடுத்தாகவேண்டும். அதற்கு ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி முனைப்புடன் செயற்படவுள்ளது என்றார்.

## குழப்பவாதிகளை ரணில் சரியாக கையாள்கின்றார்

### பெரமுன பாராட்டு

ரணில் அப்பாச்சியின் கொள்கைகள் தொடர்பில் சிறு வேறுபாடுகள் காணப்பட்டாலும் அவர் குழப்பாவதிகளை கையாளும் முறையை வரவேற்கின்றோம் என்று இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார். அத்துடன் பயங்காரவாத எதிர்ப்புச் சட்டம் கொண்டுவரபட்டால் இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவளிப்போம் என்றும் குறிப்பிட்டார்.

கலகமுவில் திங்கட் கிழமைநடைபெற்றநிகழ்வில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமக்கு மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். இருப்பினும்சிலகுழப்பகாரர்களால் கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் ஆட்சியைத் தொடர முடியவில்லை.

அதன் பின்னர் ரணில் அப்பாச்சி ஆட்சியைப் பொறுப்பெடுத்தார். அவருடைய கொள்கைகள் தொடர்பில் எமக்குச் சிறு வேறுபாடுகள் எமக்கு இருக்கின்றன.

இருப்பினும், அவர் குழப்பவாதிகளை கையாளும் முறைமையை நாம் வரவேற்கின்றோம். அது மட்டுமன்றி புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாம் அதனை இரு கைகளையும் உயர்த்தி ஆதரவளிப்போம் - என்றார்.

## ஆலயத்தில் பித்தளை பொருட்கள் திருட்டு

யாழ்ப்பாணம், மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் ஆலயத்தில் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான பித்தளை விளக்குகள் உட்பட பித்தளை பொருட்கள் பலவும் திருட்டு போனதாக ஆலயத்தினரால் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளின் போது ஆலய உதவி பூசகர் ஒருவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து விசாணைகளை முன்னெடுத்தனர். அவர் இரும்பு வியாபாரிக்கு குறித்த பொருட்களை விற்பனை செய்திருந்தமை தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து யாழ்பாணத்தைச் ☞2

## பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் புத்தாண்டின் பின்னர் அறிவிக்கப்படும்

### நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவிப்பு

புத்தாண்டில் மருத்துநீர் தேய்த்து நீராடியதன் பின்னர் பொது ஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை என்னைவிடப் புகழ் பெற்ற ஒருவர் அறிவிப்பார் என்று அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்தப்படாது. முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்று கூறப்படுவதானது தவறு. உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பில் பேச்சு முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலை இப்போதுநடத்துவதாகயாரும் கூறவில்லை. அது தொடர்பில் எமது கட்சிக்குள் ஆராயப்படவில்லை ஆகவே ஆராயப்படாத விடயம் சம்பந்தமாக என்னால்பதிலளிக்கமுடியாது.

ஜனாதிபதிவேட்பாளராக ரணில்விக்கிரமசிங்கநியமிக்கப்படப்போகின்றார்என்பதும், எமது கட்சியின் ஆதரவு உள்ளது என்பதும் உறுதிப்படுத்தப்படாத கதைகள். அவ்வாறான எந்தவிதமான கலந்துரையாடல்களையும் கட்சி நடத்தவில்லை.

அதேநேரம், பசில்ராஜபக்ஷவா ஜனாதிபதி வேட்பாளர் என்றெல்லாம் கேள்விகள் உள்ளன. பசில் ராஜபக் ஷ ஜனாதிபதி வேட்பாளர் என்று அறிவிக்கப்பட்டால் அதில் தவறுகள்ஒன்றுமில்லை. நாம் கட்சியின் தீர்மானத்தினை ஆதரிப்போம். ☞2

## வெடுக்குநாறி ஆதி லிங்க அழிப்பு இந்தியப் பிரதமரின் கவனத்துக்கு

### தூதரக அதிகாரிகளுடனான சந்திப்பில் உறுதியளிப்பு

(ந.லோகதயாளன்)

வெடுக்குநாறி ஆலய அழிப்பு விவகாரம் ஆலய நிர்வாகம்கோரியபடிஇந்தியப் பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என இந்தியத் தூதுவர் ஆலய நிர்வாகத்தினரிடம் உறுதியளித்தார்.

நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினரை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தில் திங்கட்கிழமை பிற்பகல் சந்தித்தார்.

வெடுக்குநாறி ஆலய நிர்வாகம் முன் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் இந்தச் சந்ததிப்பு இடம்பெற்றது.

இச் சந்திப்பில் தமதது சட்டத்தரணியுடன் ஆலய நிர்வாகத்தினர் நால்வர் பங்குகொண்டனர். இதே போன்று தூதரகத்தின் சார்பிலும் தூதுவர், பிரதி தூதுவர் அநிகாரிகள் என ஐவர் பங்குகொண்டனர்.

இந்த சந்திப்பின்போது வெடுக்குநாறி ஆதிலிங்க ஆலய வரலாற்று ஆவணங்கள், ஆலயம் மீது போடப்பட்டுள்ள வழக்கு, ஆலய விக்கிரகங்கள் அழக்கப்பட்டதற்கான ஆதாரங்கள், அவை தொடர்பில் எழுந்த சர்ச்சை என அனைத்தும் ஆவண ரீதியாக இந்தியத் தூதரிடம் கையளிக்கப்பட்டதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். இந்தியப் பிரதமரிடம் சபர்ப்பிக்கும் நோக்கில் அவை தூதுவரிடம் கையளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

‘‘உங்கள் ☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்டுக்கொண்டிருந்தார். நீண்ட நாள்களாக அது பற்றி கணக்கில் எடுக்காமலிருந்த அரசு. இதையடுத்து மீரிகானவில் உள்ள தன்னுடைய சொந்த வீட்டுக்குச் செல்வதற்கு கோட்டாபய நடவடிக்கை எடுத்தார். அதைத் தொடர்ந்து கடந்த வாரம் புல்லர்ஸ் மாவத்தை வீட்டை கோட்டாபயவிடம் கையளிப்பதற்கு ஆட்சித் தரப்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கோட்டாபயவின் கைகளில் வீட்டுத் திறப்பு ஒப்படைக்கப்பட்டுவிட்டது. இப்போது அந்தவீட்டுக்கானனதளபாடங்களை வாங்குவதில் அவர் கவனம்செலுத்திவருகின்றார் என்று கூறப்படுகின்றது.

................ . .............

பழைய கூட்டாளிகளான மகிந்த ராஜபக்சவும் உதயன கம்பன்பிலவும் நேரில் சந்தித்துப் பேசித் தமக்கிடையிலான மனக் கசப்புக்களை நீக்கிக் கொண்டனர் என்றும் அடுத்த மாதத்தில் மகிந்தவைப் பிரதமராக்கும் நடவடிக்கைகளின் போது அவர் மகிந்த பக்கம் இருப்பார் என்றும் நேற்று இந்தப் பத்தியில் எழுதியிருந்தேன். இந்த நிலையில் அந்தத் தகவலை மறுத்துள்ளார் உதய கம்பன்பில.

மகிந்தவைத் தான் சந்தித்தார் என்று வரும் செய்திகள் அனைத்தும் பொய் என்றும். தான் மகிந்தவைச் சந்தித்துக் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கும் மேலாகி விட்டது என்றும் அவர் தனது மறுப்பறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

**இடிமின்னல்**

## ஏப்ரல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னெடுப்பதில் காணப்படுகின்ற இழுபறிகள் தொடர்பில் பேச்சு நடத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு மாகாண சபைகள் மற்றும் உள்ளுராட்சி மன்றங்கள் அமைச்சரான பிரதமர் தினேஷ்குணவர்த்தனவுடன் பேச்சுநடத்தஎழுத்துமூலமாகக் கோரிக்கை விடுத்திருந்தது.

நீண்டநாட்களின்பின்னர் திங்கட்கிழமை பிரதமரால் அதற்கு நேரம் ஒதுக்கப்பட்டது.

இந்தப்பேச்சுதொடர்பில்அதில் கலந்துகொண்ட மாகாண சபைகள்மற்றும்உள்ளுராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்பர தெரிவித்ததாவது:

நாட்டின் தற்போதுள்ள நிலமைகளின் அடிப்படையில் தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டு அறிவித்ததன்படி எதிர்வரும் 25 தேர்தலை நடத்த முடியாதுள்ளது.

இதனால் தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளுராட்சி மன்றங்களுக்கானதேர்தலை நடத்துவதற்குரிய உசிதமான மற்றொருதிகதியைவிரைவில் தீர்மானித்து உத்தியோக பூர்வமாக அறிவிக்கவுள்ளது.

பிரதமருடனான பேச்சில், நீதிமன்ற நடவடிக்கைகளில் சட்டமா அதிபர் திணைக்களம் தேர்தல்கள் ஆணைக்குழு சார்பில்முன்னிலையாகாமை குறித்துத் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

தேர்தலுக்கான நிதி தொடர்பிலும் பேசப்பட்டது. ஆனால் முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. இது நிதி அமைச்சு சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் விரைவில் நிதி அமைச்சுடன் கலந்துரையாடுவதற்கு இணக்கம் எட்டப்பட்டது.

தேர்தலை நடத்துவதற்கான நிதி தொடர்பான தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வினை வழங்க நடவடிக்கை எடுப்பதாக பிரதமர்தினேஷ்குணவர்தன உறுதியளித்தார்.

அதுமட்டுமன்றி தேர்தல் ஆணைக்குழு பல நடவடிக்கைகளுக்காக நிதியை கோரியுள்ளது. அக்கோரிக்கைகள் குறித்து பிதரமரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தெளிவுபடுத்தப்படவுள்ளது.

மே 11ஆம் திகதி தேர்தலுடன் தொடர்புடைய பல வழக்கு விசாரணைகள் உள்ளன. அவை தொடர்பிலும் அவதானம் செலுத்தி அடுத்தகட்டநடவடிக்கைகளை எடுப்பதே எமது எதிர்பார்ப்பாகும். தற்போது ஆளுனர்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் 340 உள்ளுராட்சி மன்றங்களினதும் நிர்வாக நடவடிக்கைகளை விரைவில் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதே எமது நோக்கமாகும்.

நாம் தேர்தலை நடத்துவதற்கு எதிரானவர்கள் அல்லர். தேர்தல் ஆணைக்குழுவுடன் எமக்கு எவ்வித முரண்பாடுகளும் இல்லை. தேர்தலை நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்திக் கொடுப்பதே எமது பிரதான நோக்கம்.

இந்நிலையில் தேர்தல் ஆணைக்குழு விரைவில் நிதி அமைச்சுடன் மற்றொரு சந்திப்பினை நடத்தவுள்ளது. அதன் பின்னரே தேர்தலை நடத்தக்கூடிய உசிதமான தினம்குறித்துஅறிவிக்கப்படும். எவ்வாறிருப்பினும் தற்போதுள்ள நிலைமையில் ஏப்ரல் திகதி தேர்தலை நடத்த முடியாது.

தேர்தலில் போட்டியிடவுள்ள அரச உத்தியோகத்தர்களின் சம்பள பிரச்சினையும் காணப்படுகிறது. மார்ச் 9 முதல் ஏப்ரல்25ஆம் திகதி வரை அவர்களுக்கு அடிப்படை சம்பளத்தை மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். அதற்குப் பின்னர் அவர்களுக்குச் சம்பளம் வழங்குவதிலுள்ள நெருக்கடி தொடர்பிலும் இதன்போது ஆழமாக அவதானம் செலுத்தப்பட்டது.

இது குறித்து பரிந்துரையொன்றைத் தயாரித்து பொதுநிர்வாக அமைச்சிற்கு அனுப்புவதற்கு இந்தக் கலந்துரையாடலின் போது இணக்கப்பாடு எட்டப்பட்டது.

அதற்கமைய குறித்த அரசஉத்தியோகத்தர்களுக்கு அவர்கள் போட்டியிடவுள்ள தொகுதிக்கு அப்பால் பிரிதொரு பிரதேசத்தில் தற்காலிக நியமனத்தை வழங்கி, சம்பளத்தை வழங்குவதற்கான நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும் அவதானம் செலுத்தப்பட்டது - என்றார்.

## 2030 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்திருக்கின்றது. இருப்பினும் புத்தாண்டை சாதாரண மக்களும் கொண்டாடும் வகையில் சில முன்னேற்றங்களைச் செய்துள்ளார்.

அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படவில்லை ஆனால் வரிசை யுகத்துக்கு முற்றுப்புள்ளி வைத்து பொருட்களின் விலைகளை ஓரளவு குறைத்து, சட்டத்தையும் ஒழுங்கையும் உறுதிப்படுத்தி சுமூகமான சூழலை நோக்கி நாட்டை நகர்த்தியுள்ளார்.

இந்த நிலைமைகளை ஏற்படுத்துதற்கான தலைமைத்துவத்தினை வழங்குவதற்கான திறமை ரணில் விக்கிரமசிற்கவுக்கு மட்டுமே உள்ளது.

2030ஆம் ஆண்டு வரையில் இவ்வாறான தலைமைத்துவத்தினை வழங்கும் ஒருவரினால் நாடு நிர்வகிக்கப்பட்டால் அனைவரும் எதிர்பார்க்கும் எதிர்காலம் உருவாகிவிடும்.

ஆவ்வாறில்லாது ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து, ஒருசிலரின் பொய்யான பிரசாரங்களை நம்பி எதிர்ப்புக்களைச் செய்தால் மீண்டும் கடந்த மே மாத நிலைமைகளுக்குள் தான் நாடு செல்லும் - என்றார்.

## நாணய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும்நுவரெலியாவாகவே தொடர்ந்தும் தக்கவைப்பதா அல்லது நியுயோர்க் நகரமாக மாற்றியமைப்பதாகஎன்பதை தீர்மானிக்க வேண்டும்.

மத்திய அதிவேக வீதியின் நிர்மாண பணிகள் நிறைவு கண்டவுடன் நுவரெலியாவிற்கு வருகைத்தரும் சுற்றுலாப் பிரயாணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். அவர்களுக்கு அவசியமான வசதிகளை மேம்படுத்துவதற்கான உரிய திட்டங்களை வகுத்து செயற்படவேண்டும்.

முதலீட்டாளர்கள் மற்றும் வேறு தரப்பினருக்கு அவசியமான வகையில் நுவரெலியா மாவட்டத்தை சீரழிப்பதற்கு இடமளிக்க முடியாது. சுற்றுச் சூழலுக்கு உகந்ததாகவும்திட்டமிடப்பட்ட வகையிலுமான அபிவிருத்தியை நகருக்குள் ஏற்படுத்த வேண்டும்.

இந்த விடயத்தில் அரசியல் பிரமுகர்களும் அரசாங்க அதிகாரிகளும் நன்கு புரிதலுடன் ஒருங்கிணைந்து செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டியது அவசியம். புதிதாக சிந்தனைகளுன் நாட்டிற்கு அவசியமான புதிய வேலைத்திட்டத்தை முன்னெடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் பின்னர் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்கள், அதிகார சபை மற்றும் ஆணைக்குழுக்கள் மற்றும்திணைக்களங்களின் தலைவர்களை சந்திப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன் 2025 ஆம் ஆண்டு இலக்கு வைத்துள்ள அபிவிருத்தித் திட்டத்தில் வெற்றியீட்டுவதற்கு அனைத்துத் தரப்பினரின் பங்களிப்பையும் பெறுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

நிலையான மற்றும் கவர்ச்சியான அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக நுவரெலியா மாவட்டத்தை சுற்றாடலுக்கு உகந்த மாவட்டமாக அபிவிருத்தி செய்வதோடு, நானுஓயாவை உப நகரமாக அபிவிருத்திசெய்யப்பட வேண்டும் - என்றார்.

இதேவேளை, வனப் பாதுகாப்புப் பகுதிகளைப் பாதுகாத்து நுவரெலியாவை பசுமை நகரமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதுடன் நுவரெலியாவை மையமாகக் கொண்டு 05 புறநகர்ப் பகுதிகளை அபிவிருத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் பல்கலைக்கழகம் ஒன்றை அமைப்பது மற்றும் இராமாயண மையம் ஒன்றை அமைப்பது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

நானுஓயா புகையிரத நிலையத்தை நவீனமயப்படுத்தி அதற்கு அருகில் உயர் தர பொருளாதார நிலையமொன்றை ஸ்தாபிப்பதன் மூலம் விவசாயிகள் மரக்கறிகளை பொதி செய்து பாதுகாப்பாக கொழும்புக்கு கொண்டு செல்ல முடியும் என்றும் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

குதிரைப் பந்தய மைதானம் மற்றும் குளத்தை அபிவிருத்தி செய்தல், குளத்திற்கு அருகில் வாகன தரிப்பிட வசதிகளை மேம்படுத்துதல், நுவரெலியா நகரில் முறையான நீர் முகாமைத்துவ வேலைத்திட்டத்தைதுரிதமாக நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், பிரதேச மக்களின்வருமானத்தைஉயர்த்தி அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத்திட்டம் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

## ஓகஸ்டில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டவுள்ளது.

முன்னதாக மார்ச் மாதம் 9ஆம திகதி உள்ளுராட்சி மன்றங்களுக்கானதேர்தலை நடத்துவதாகஅறிவிக்கப்பட்டது, அதற்கான நிதியை திறைசேரி விடுவிக்காததைஅடுத்துஏப்ரல் 25 வாக்கெடுப்பு நடக்கும் என்று அறிவிக்கப்பட்டது.

எனினும், தற்போதும் தேர்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான நிதி விடுவிக்கப்படாமையின் காரணமாகமீண்டும்அத்திகதி ஒத்திவைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலை ஓகஸ்ட் மாதம் வைப்பார் என்று சர்வதேச நாணயநிதியத்திற்குஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளதாகக் கூறப் படும் நிலையில் அதே மாதத்தில் தேர்தலுக்கான திகதி குறிக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆலயத்தில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இரும்பு வியாபாரியொருவரை சந்தேகத்தின் அடிப்படையில் மானிப்பாய் பொலிஸார்கைதுசெய்ததோடு திருட்டுப் பொருட்களையும் கைப்பற்றியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

## பெரமுனவுக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்கொள்ளும்.

தற்போது நாற்பது பேர் அரசுடன் இணையப் போகின்றார்கள், ஐம்பது பேர் வரப்போகின்றார்கள்என்றெல்லாம் கூறப்படுகின்றது. அவ்விதமான எந்த நிகழ்வுகளும் நடைபெறாது. ஒருவர் இருவர் வேண்டுமானால் அமைச்சுப் பதவி ஆசையால் இணைந்துகொள்ளலாம். அதனை நாம் தடுக்கப் போவதில்லை. அதற்கான தீர்ப்பினை மக்கள் வழங்குவார்கள் - என்றார்.

## பெரமுனவின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதேநேரம் ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய கேள்விகளுக்கு எல்லாம் பதில்கள் வழங்கப்படும்.

என்னைவிடப் பிரபல்யமான ஒருவர் இந்த ஊடக மேடையில் இருந்து அதனை அறிவிப்பார். அந்த அறிவிப்பு புத்தாண்டில் மருத்துநீர் தேய்த்து நீரடிய பின்னர் உத்தியோகபூர்வமாகநடக்கும் - என்றார்.

## பயனற்ற .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்" என்றார் அவர்.

அமைச்சருடனான சந்திப்புஓர்பயனுமின்றிமுடிந்தது வீண்விரயம். உண்மையில், இந்தப்பிரச்சினை தொடர்பில் இலங்கை அமைச்சரை விடவும் இந்திய அதிகாரிகள் மிகவும் கரிசணையோடு செவிசாய்த்தனர்என ஆலயம் சார்பில்பேச்சில்பங்குகொண்ட ஒருவர் தெரிவித்தார்.

## வெடுக்குநாறி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரிக்கை மனு மற்றும் ஆவணங்கள் இந்தியப் பிரதமிரற்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தூதுவர் உறுதியளித்தார்'' என்றும் ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு தொலைபேசி இலக்கம்
076 443 80 22

ஆறு மாத DSL உத்தரவாதத்துடன்
Palma மின்கலங்கள்
IT Power Backupக்காக
dsl We lead the way...!
PALMA
7Ah | 9 Ah | 20 Ah | 26 Ah | 42 Ah
65 Ah | 100 Ah | 150Ah | 200 Ah
ரூ.5,814 இருந்து
மின்சார தராசுகள் & பொம்மைகளுக்காக
6Ah | 12 Ah
ரூ.2,223 இருந்து
மின் மோட்டார் சைக்கிள்களுக்கான
12Ah | 20 Ah | 24 Ah | 28 Ah | 45 Ah
ரூ.13,252 இருந்து



Douglas & sons (pvt) ltd நான்கு தசாப்தங்களாக இலங்கை வாடிக்கையாளர்களின் வாகன மற்றும் பிற தேவைகளுக்காக சர்வதேச தரத்திலான பேட்டரிகளை இறக்குமதி செய்து விநியோகித்து வருகிறது.
077 307 8799
070 163 0209

காலைக்கதிர்
Kalaikkathir

# மீண்டும் ஆட்சியைப் பிடிப்போம் இது சரத் வீரசேகரவின் நம்பிக்கை



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தில் பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள்தாக்கப்பட்டமைகவலைக் குரியது.

மே 9 சம்பவத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பாதுகாப்பு தரப்பினர்குறைந்தபட்சஅதிகாரத்தை கூட பயன்படுத்தாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தார்கள் என முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொலன்னாவ பகுதியில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

பாரிய எதிர்பார்ப்புக்கு மத்தியில் நாட்டு மக்கள் 2019 ஆம் ஆண்டு ஆட்சிமாற்றத்தைஏற்படுத்தினார்கள். ஒரு தரப்பினர் வழங்கிய தவறான ஆலோசனைகளால் அரசாங்கம் பலவீனமடைந்தது.

பொதுஜனபெரமுனஅரசியலில் பலவீனமடைந்துவிட்டது என ஒரு தரப்பினர் அரசியல் பிரசாரம் செய்கிறார்கள்.

பெரும்பான்மையின மக்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மீதுநம்பிக்கை கொண்டுள்ளார்கள்.

சிறந்த மறுசீரமைப்புடன் பொது ஜன பெரமுன மீண்டும் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றும் என்பதை உறுதியாகக் குறிப் பிட்டுக்கொள்கிறோம்.

கடந்த ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டார்கள். ஆளும் தரப்பு உறுப்பினர்களின் வீடுகள் மற்றும் சொத்துக்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இந்த சம்பவங்கள் எமது அரசாங்கத்தில் தான் இடம்பெற்றன.

போராட்டத்தை அடக்கி, நாட்டின் சட்டவொழுங்கை பாதுகாக்க பாதுகாப்பு தரப்பினர் குறைந்த பட்ச அதிகாரத்தைக் கூடப் பயன் படுத்தவில்லை. தாக்குதல்கள் இடம்பெறும்போது கைகட்டி வேடிக்கை பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

மே 9 சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்ட குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

மே 9 சம்பவத்தால் பாதிக்கப் பட்ட தரப்பினருக்கு விரைவில் நிவாரணம் வழங்குமாறு ஜனாதி பதியிடம் கோரிக்கை விடுத்துள் ளோம். - என்றார்.

# கழிவு தேயிலையை ஏற்றிச்சென்ற 3 பேர் வட்டவளையில் கைது!

அனுமதிப்பத்திரம் இல்லாமல் வானில்கழிவுதேயிலையைஏற்றிச் சென்ற மூன்று சந்தேகநபர்கள் வட்டவளை

பொலிஸாரால் கைது செய்-யப்பட்டுள்ளனர்.

அனுமதிப்பத்திரம் இல்லாமல் வேனில் கழிவு தேயிலை தூளை ஏற்றிச் சென்ற மூன்று சந்தேக நபர்களை வட்டவளை

பொலிஸார் நேற்று (ஞா-யிற்றுக்கிழமை) அதிகாலை கைதுசெய்ததுடன் சந்தேக நபர்களை ஹற்றன் நீதிவான்

முன்னிலையில் ஆஜர்படுத்தியதன் பின்னர் சந்தேகநபர்கள் மூவரும் தலா இரண்டு லட்சம் ரூபா பிணையில்

விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் மூவரும் 52 பைகளில் 800 கிலோ கழிவு தேயிலை தூளை அக்கர பத்தனையிலிருந்து கம்பளை

வெலம்பொட பகுதிக்கு அனுமதிப்பத்திரம் இல்லாமல் வானில் ஏற்றிச் சென்ற போது ரோந்து பணியில்

ஈடுபட்டிருந்த வட்டவளை பொலிஸார்வட்டவளையில்வைத்து நேற்றுஅதிகாலைவேனைதடுத்து நிறுத்தினர்.

இதன்போது குறித்த வானை சோதனைக்குட்படுத்திய போது, அனுமதிப்பத்திரம் இல்லாதது தெரியவந்துள்ளது.

இதனையடுத்து, சந்தேகத்தின்பேரில் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில்ஆஜர்படுத்தப்பட்டமூன்று சந்தேக நபர்களும் கம்பளை வெலம்பொட

பிரதேசத்தை சேர்ந்தவர்கள் எனவும், சந்தேக நபர்கள் 25-30 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் பொலிஸார்

தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# அமைச்சரவையை விரிவாக்கவா நாணய நிதியம் கடன் தந்தது?

## நாலக கொடஹேவா கேள்வி



பொருளாதாரப் பாதிப்புக்கு மத்தியில் அமைச்சரவையை விஸ்தரிப்பதற்காகவா சர்வதேச நாணய நிதியம் முதல் தவணை நிதி தொகையை வழங்கியுள்ளது.

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணும் உண்மை நோக்கம் அரசாங்கத்துக்கு கிடையாது என நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டுகருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் கொள்கைகளை ஐக்கிய மக்கள் சக்தியினர் ஏற்றுக்கொள்கிறார்கள்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும் போது சமூகக் கட்டமைப்பில் ஏற்படும் பாதிப்பு தொடர்பில் அவர்கள் கருத்துரைப்பதில்லை. இதனை பிரதான குறைபாடாகக் கருத வேண்டும்.

தேசிய கடன்களை மறுசீரமைக்குமாறு சர்வதேச நாணய நிதியம் முன்வைத்த நிபந்தனையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

தேசிய கடன் மறுசீரமைக் கப்பட்டால் வங்கி கட்டமைப்பு பாதிக்கப்படும்.இதனால் சாதாரண சேமிப்பு வைப்பாளர்கள் கூட பாதிக்கப்படுவார்கள்.

கட்சி தாவும் அரசியல் இல்லாதொழியும் வரை சிறந்த அரசியல் கலாசாரத்தைஉருவாக்கமுடியாது. அமைச்சு பதவிகளுக்காக அரசாங்கத்துடன் இணைய ஐக்கிய மக்கள் சக்தியின் பெரும்பாலான உறுப்பினர்கள் தயாராகவுள்ளார்கள். அமைச்சரவையை விஸ்தரிப்பதற்காகவா சர்வதேச நாணய நிதியம் முதல் தவணை நிதி வழங்கியது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த நிதி இல்லை என்று குறிப்பிடும் அரசாங்கம் அமைச்சரவை மாத்திரம் விஸ்தரித்து அரச செலவுகளை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள வேண்டுமாயின் முதலில் அரசாங்கம் விட்டுக் கொடுப்புடனும்,மக்களுக்கு எடுத்துக்காட்டாகவும் செயற்பட வேண்டும். - என்றார்.

# இரு குழுக்களுக்கிடையில் மோதல் நான்கு பேர் காயம்: 8 பேர் கைது

நாகொல்லாகம பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நடைபெற்ற இசை நிகழ்வொன்றின் கலந்துகொண்ட இருகுழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் நால்வர் காயமடைந்துள்ளதுடன் 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச்மோதல்சம்பவம்ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

நாகொல்லாகமநகரப்பகுதியில் நடைபெற்றஇசைநிகழ்வொன்றுக்கு வருகை தந்திருந்த இருகுழுக்களுக்கு இடையில் மோதல் இடம் பெற்று நால்வர் காயமடைந்த நிலையில் நாகொல்லாகம வைத்தியசாலையில்சேர்க்கப்பட்டுள்ளனர் என 118 எனும் பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

காயமடைந்த நால்வரில் ஒருவர் மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, சம்பவத்துடன் தொடர்புடைய 8 பேர்கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்களிடமிருந்து 4 மோட்டார் சைக்கிள்கள் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்ட இரும்புக்கம்பி மற்றும்கத்தி ஒன்றும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 16 முதல் 47 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் மஹவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் நாகொல்லாகமபொலிஸார்மேலதிக விசாரணைகளை முன்னெடுத் துள்ளனர்.




காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அமைச்சரவை விரிவாக்கம் அவசியமற்றது

அமைச்சரவை மாற்றம் தொடர்பில் இப்போது அடிக்கடி செய்திகள் வருகின்றன. கடைசியாகப் புதுவருடத்திற்குப் பின்னர் அமைச்சரவை மாற்றம் விரிவாக்கத்துடன் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. மற்றொரு பக்கத்தில் ஏழைகளுக்கு, நலிந்தவர்களுக்கு உதவுவதற்காக வசதி படைத்தவர்கள் தம்மை மேலும் அர்ப்பணித்து நடக்கவேண்டும் என்றும் ஆட்சித் தரப்பில் சொல்லப்படுகின்றது.

அமைச்சரவை மாற்றம் அரசியல் முன்னேற்றத்திற்காகவோ நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவோ தேவைப்படுவதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட தேவை ஏதும் இருப்பதாக எந்தவித ஆய்வு முடிவுகளும் இல்லை. ஆளும் தரப்பான பொது ஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்காகவே அமைச்சரவையை விரிவாக்கம் செய்யவேண்டியிருக்கிறது.

அப்படி அமைச்சரவையை விரிவாக்கம் செய்வதால் அரசின் செலவுதான் மேலும் அதிகரிக்கும். பொருளாதார நெருக்கடியான காலத்தில் அரச செலவுகளை மேலும் எப்படிச் சுருக்க முடியும் என்பதில்தான் அக்கறை செலுத்தப்படவேண்டுமே தவிர, செசவுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் அக்கறை காட்டப்படக்கூடாது.

அரசியல்வாதிகளின் தேவைக்காகவும் அரசியல் நோக்கங்களுக்காகவும் அமைச்சரவையை விரிவாக்கம் செய்வதன் மூலம் அரச செலவுகள் அதிகரிப்பதைத் தவிர வேறு எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை. அது நாட்டின் தற்போதைய நிலையில் தேவையற்றது. உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 ஆயிரமாக இருப்பதே அதிக செலவு மிக்கது என்று தெரிவிக்கும் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அதனை 4 ஆயிரமாகக் குறைக்கவேண்டும் என்று கருத்துத் தெரிவிக்கும் நிலையில், அமைச்சரவையை விரிவாக்குவது அர்த்தமற்றது.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்டதிலிருந்து சாதாரண மக்கள், அரச ஊழியர்கள் அனைவரும் அதன் சுமையைப் பகிர்ந்துகொண்டபோதும் நாடாளுமன்ற உறுப்பினர்களதும் அமைச்சர்களதும் வரப் பிரசாதங்களில் எந்தக் குறைவும் இல்லாத நிலையே நீடிக்கின்றது. வெளிநாட்டுப் பயணங்கள் குறைக்கப்பட்டது, வெளிநாட்டுப் பயணங்களுக்கான விமான பயணச் சீட்டுக்களுக்கான கொடுப்பனவு குறைக்கப்பட்டது என்று புறக்கணிக்கத்தக்க நடவடிக்கைகளே அரசியல்வாதிகள் தொடர்பில் எடுக்கப்பட்டிருக்கின்றன. அதனால் அரசுக்கு மீதமாகக்கூடிய தொகை ஒன்றும் மிகப் பெரியதல்ல. அப்படியிருக்கும்போது, அமைச்சரவை விரிவாக்கம் மேலும் சுமையை அதிகரிக்குமே தவிர குறைக்காது.

அதனால் அமைச்சரவை விரிவாக்கம் குறித்த யோசனையை ஆட்சியாளர்கள் கைவிடவேண்டும். இன்னும்சொல்லப்போனால்அமைச்சரவையைஇன்னும் சீர்மைப்படுத்தி எண்ணிக்கையைக் குறைத்து அதன் செயற்றிறனை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமே தவிர அமம்சசரவையை அதிகரிக்கக்கூடாது. மூத்த அரசியல்வாதிகள், கட்சியின் மூத்த உறுப்பினர்கள், நீண்ட காலமாகக் கூடவே இருப்பவர்கள் என்கிற வகையில் அமைச்சுப் பதவிகள் வழங்குவதை நிறுத்திவிட்டு, வினைத்திறனோடு செயற்படுபவர்களை அமைச்சுப் பதவிகளில் அமர்த்தி செலவுகளைக் குறைத்து பணிகளை விரைவுபடுத்தும் வகையிலான அமைச்சரவை மறுசீரமைப்புத்தான் தேவையே தவிர, அரசியல் ரீதியான விரிவாக்கம் அல்ல என்பதை ஆட்சியாளர்கள் கவனத்தில்கொள்ள வேண்டும்.

# தகவல் அறியும் உரிமையை அரசாங்கம் முடக்க முயல்வது ஜனநாயக விரோதம்!

## முஜிபுர் ரஹ்மான் சாடல்



சமூகப் பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் நாட்டு மக்களுக்கு தகவல் அறியும் உரிமையை அரசு முடக்க முயல்வது ஜனநாயகத்துக்கு விரோதமானதும் நாட்டின் அரசமைப்பிற்கும் எதிரானதுமாகும். அத்துடன் இந்தச் சட்ட மூலத்தின் மூலம் அரசாங்கத்துக்கு எதிரானமக்கள்போராட்டத்தை நசுக்கவும், தமக்கு எதிராகப் போராடும் அனைவரையும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தவும் அரசாங்கம் முயற்சிப்பதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடைபெற்றஊடகவியலாளர்மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் -

புதியபயங்கரவாதஎதிர்ப்பு சட்டமூலமொன்றைசமர்ப்பித்து வர்த்தமானியில் பிரகடனம் செய்து நாடாளுமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

நாட்டின் சிவில் செயற்பாட்டாளர்கள், அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்களின் தலைவர்கள், மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் வெளிநாட்டு அமைப்புகள் இந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்குஎதிராகசெயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

அத்துடன் இந்தச் சட்ட மூலத்தின் மூலம் அரசாங்கத்துக்கு எதிரான மக்கள் போராட்டத்தை நசுக்கவும் தமக்கு எதிராகப் போராடும் அனைவரையும் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தவும் அரசாங்கம் முயற்சிகிறது.

நாட்டு மக்களின் எதிர்ப்புடன்ஐரோப்பியஒன்றியத்தின் எதிர்ப்பும் இருப்பதால் இதையும் தாண்டி இந்த சட்ட மூலத்தை அரசாங்கம் அமுல்படுத்தமுயற்சித்தால்ஜி.எஸ்.பி. சலுகையும் இல்லாது போகும் அபாய முண்டு. இந்த விடயங்கள் அனைத்திலும் கருத்தில் கொண்டு அரசாங்கம் ஒரு படி பின்வாங்கியுள்ளது.

இந்த பயங்கரவாத சட்ட மூலத்தை அரசாங்கம் தற்காலிகமாக வாபஸ் பெற்றுள்ள போதிலும் சமூக ஊடக பாதுகாப்பு சட்டம் என்ற புதிய சட்டமூலத்தை கொண்டுவர அரசாங்கம் முயற்சித்து வருகிறது. அதற்குத் தேவையான அனைத்து விதிமுறைகளும் ஒழுங்குகளும் சட்ட வரைவுகளும் தயாராகி வருகின்றன.

உலகில் ஒவ்வொரு நாட்டிலும் ஜனநாயக விரோத ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் எழுச்சிகள் ஏதோ ஒரு வகையில் அடக்கி முடக்கச்செய்யும் புதிய சட்டம் அரசாங்கத்துக்குத் தேவை. இப்போது பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தற்காலிகமாக வாபஸ்பெறப்பட்டதால் அந்தச் சட்டத்தால் செய்ய முடியாமல் போனதை இப்போது சமூக ஊடகப்பாதுகாப்புசட்டம்மூலம் நிறைவேற்றப் பார்க்கிறார்கள்.

நாட்டுமக்களின் கருத்துக்களையும், எழுத்தையும் பரப்பும் சமூக வலைதள ஆர்வலர்களை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து அரசாங்க ஆட்சியாளர்களின் தேவைக்கேற்ப செயல்படக் கூடியசட்டஅமைப்பைகொண்டு வர முயற்சிக்கின்றனர்.

இப்போது ஊழலுக்கு எதிரானசட்டமூலத்தைஅரசாங்கம்கொண்டுவரமுயற்சிக்கிறது. இந்த சட்ட மூலம் அரசாங்கம் இரண்டு செயல்பாடுகளை எதிர்பார்க்கிறது என்பது தெளிவாகிறது.

முதலாவதுஇலஞ்சஊழல் ஆணைக்குழுவிற்கு பதிலாக புதிய ஆணைக்குழுவை நிறுவுதல். 1994 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு சட்டத்தை இரத்துச்செய்வது. இரண்டாவது 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துரிமை பொறுப்புச் சட்டத்தை நீக்குவதும் இதற்கு மாற்றீடுகளாக புதிய சட்டமூலத்தை கொண்டுவருவது மாகும். - என்றார்.

# கோட்டாவை ஜனாதிபதியாக்கிய தவறை ரணிலைத் தெரிவு செய்து சரி செய்தோம்

## பவித்ராவுக்கு பிந்திப் பிறந்த ஞானம்



கோட்டாபயராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவுசெய்து அரசியல்ரீதியில் எடுத்த தவறான தீர்மானத்தை இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்து சரிசெய்தோம்.

ஜனநாயகத்தை ஸ்திரப்படுத்துவதற்காகவே அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் தீர்மானம் எடுத்தோம் என வனஜீவராசிகள் பாதுகாப்பு அமைச்சர் பவித்ராதேவி வன்னியராட்சி தெரிவித்தார்.

கொலன்னாவ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடவை வருமாறு -

ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு என்ன செய்தார்கள்? 75 வருடகால அரசியல் கட்டமைப்பு மோசமானது என எதிர்தரப்பினர் அரசியல் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளார்கள்.

30 வருட காலப் போரை முடிவுக்கு கொண்டு வந்து குறுகிய காலத்திற்குள் ராஜபக்ஷர்கள் நாட்டை அபிவிருத்தி செய்தார்கள்.

ராஜபக்ஷர்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையை பெரும்பாலான மக்கள் மறக்கவில்லை. அபிவிருத்தி செயற்திட்டத்தின் பயனை அனுபவிக்கிறார்கள்.

எதிர்வரும் காலங்களில் ராஜபக்ஷர்கள் தலைமையிலான சிறந்த அரசியல் மாற்றம் ஏற்படும்என்பதைஉறுதியாகக் குறிப்பிட்டுக் கொள்கிறோம்.

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தெரிவின்போது கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவித்ததன் தவறை நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற இடைக்கால ஜனாதிபதித் தெரிவின்போது ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்து திருத்திக் கொண்டோம்.

இடைக்கால ஜனாதிபதி தெரிவின் போது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர்களாக ரணில் விக்கிரமசிங்க, டலஸ் அழகபெரும ஆகியோர் களமிறங்கினார்கள். பொருளாதார நெருக்கடி, ஜனநாயகம் ஆகிய அடிப்படை காரணிகளுக்கு முன்னுரிமை வழங்கி இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவைத்தெரிவுசெய்தோம்.

ஜனநாயகத்தை ஸ்தீரப்படுத்துவதற்காகவே அரசியலுக்கு அப்பாற்பட்ட வகையில் தீர்மானம் எடுத்தோம். எமது தீர்மானம் சரியானது என்பதை நாட்டு மக்கள் தற்போது விளங்கிக் கொண்டுள்ளார்கள். - என்றார்.

# மனித உரிமை என்றால் என்னவென்று அறிந்தோரையே நியமிக்கவேண்டும்

## ஆணைக்குழுத் தலைவர் 'அட்வைஸ்'



மனித உரிமைகள் என்றால் என்ன என்பதை புரிந்துகொண்டவர்களை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு நியமிக்கவேண்டும் என ஆணைக்குழுவின் தலைவர் ரோகிணி மாரசிங்க கருத்துவெளியிட்டுள்ளார்.

மனிதஉரிமைகள்தொடர்பில் சிறிதளவும் அறிவில்லாதவர்களை இலங்கையின் மனிதஉரிமைஆணைக்குழு உறுப்பினர்களாக நியமித்தமை நாட்டின் மனித உரிமை நிலைவரத்துக்கு மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவருக்கும்அதன்உறுப்பினர்களிற்கும் இடையில் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டுள்ளநிலையில்அவரின்இந்த கருத்து வெளியாகியுள்ளது.

மனித உரிமைகள் குறித்து எந்த புரிந்துணர்வும் இல்லாதவர்களை நியமித்தமையே இந்த பிரச்சினைக்கு காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

மனிதஉரிமைகள்தொடர்பாக சிறந்த புரிந்துணர்வு கொண்டவர்களை ஆணைக்குழுவிற்குநியமிக்கவேண்டும் என நான் ஜனாதிபதிக்கு தெரிவிக்க விரும்புகின்றேன் எனத் தெரிவித்துள்ள ரோகிணி மாரசிங்க, அவ்வாறான நியமனங்களை மேற்கொள்ளாதபட்சத்திலேயே இவ்வாறான குழப்பநிலை ஏற்படுகின்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று ஆணையாளர்களுக்கும் மனித உரிமைகள் தொடர்பில் எதுவும் தெரியாது அவர்கள் கூட்டங்களுக்கு கூட சமுகமளிப்பதில்லை அவர்கள் எதுவும்செய்வதில்லைஎனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மனிதஉரிமைஆணைக்குழுவின் பணியாளர்களிடம் அவர்கள் தொடர்பில் கேட்கவேண்டும் அவர்கள் அனைத்து விடயங்களையும் தெரிவிப்பார்கள்எனவும்மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசிடம் நிதி இன்றேல் கட்டம்கட்டமாக தேர்தல்களை நடத்த முன்வரவேண்டும்

## சி.வீ.கே.சிவஞானம் ஆலோசனை

அரசாங்கத்திடம் நிதி இல்லாவிடின் கட்டம் கட்டமாகதேர்தல்களைநடத்தமுன் வர வேண்டும் என வடக்கு மாகாண சபையின் அவை தலைவர்சி.வீ.கே.சிவஞானம் கோரிக்கை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றஊடகசந்திப்பில்கருத்து தெரிவிக்கும் போது இதனை தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் -

உள்ளூராட்சி சபை தேர்தல், மாகாண சபை தேர்தல் என்பன நடாத்தப்பட வேண்டும்.கடந்தகாலங்களில் கட்டம் கட்டமாக படிப்படியாக தேர்தல் இடம்பெற்ற வரலாறுகள் உள்ளன. இந்த நிலையில் அரசாங்கம் பணம் இல்லைஎனகாலத்தைஇழுத்தடிக்காமல் கட்டம் கட்டமாக தேர்தலை நடத்த முன்வர வேண்டும்.

நாடளாவிய ரீதியில் ஆளுநர்களின் அதிகாரம் தலையீடுகள் அதிகரித்துள்ள நிலையில் வடக்கில் அது அச்சுறுத்தல் பாணியில் நகர்கின்ற நிலையே காணப்படுகின்றது. வடக்கு ஆளுநர் அச்சுறுத்தும் பாணியில் செயற்பட்டால் நாம் சட்டரீதியாக செயற்படுவோம்.

ஜனாதிபதி தேர்தல் நடக்கும் என ஊடகங்களும் அரசியல் அவதானிகளும் கூறுகின்றமை முழுமையாக தவறானது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னர் இருந்த கோட்டாபய ராஜபக்ஷவின் எஞ்சிய இடைக்காலத்துக்கே பதவியில் இருக்க முடியுமே தவிர முன்னதாகவே தேர்தலை நடத்துவதற்கு உரிமை கிடையாது. இது அரசமைப்பில் தெளிவாகக் காணப்படுகிறது.



ஏனைய ஜனாதிபதிக்கு இருக்கின்றது போல நான்கு வருடங்களுக்கு பின்னர் தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் இடைக்கால ஜனாதிபதிக்குக் கிடையாது. தேர்தலை முன்னதாகவே நடத்த வேண்டுமாக இருந்தால் அரசமைப்பில் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். அதன் பின்னரையே தேர்தலை நடத்த முடியும். - என்றார்.

# உணவுப் பொருள் பணவீக்கம்: 10 ஆவது இடத்தில் இலங்கை

உலகில்உணவுபொருள்களின் விலைப் பணவீக்கம் அதிகமாகவுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை முன்னேற்றமடைந்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பரில் உலக வங்கியால் வெளியிடப்பட்ட பட்டியலில் இலங்கை 6ஆவது இடத்தில் காணப்பட்டது. எனினும் தற்போது வெளியிடப்பட்டுள்ள பட்டியில் இலங்கை 10ஆவது இடத்தில் தரப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய இலங்கையில் உணவு பொருள்களின் விலைப்பணவீக்கம் 54 சதவீதமாகக் காணப்படுவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்தஆண்டுநவம்பரில் இது 86 சதவீத மாகக் காணப்பட்டது. வீழ்ச்சியடைந்திருந்த பொருளாதாரம் படிப்படியாக முன்னேற்றமடைந்து வருவதன் பிரதிபலனாக இந்த முடிவு கிடைக்கப் பெற்றுள்ளது.

உலக வங்கியின் தரப்படுத்தலுக்கமைய லெபனான், சிம்பாபே மற்றும் ஆஜென்டீனா ஆகிய நாடுகள் முறையே முதல் 3 இடங்களில் தரப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு ஈரான், துருக்கி, எகிப்து, ருவாண்டா, கானா, சுரினாம் ஆகிய நாடுகள் முறையே 4 - 9 வரையான இடங்களில் தரப்படுத்தப்பட்டுள்ளன. 10 ஆவது இடத்தில் இலங்கை காணப்படுகிறது.

கடந்த ஆண்டு பட்டியலுடன் ஒப்பிடுகையில் லெபனான் மற்றும் சிம்பாபே முதலிரண்டு இடங்களிலிருந்தும் மாறியுள்ளன. அத்தோடு கடந்த ஆண்டு முதல் 10 நாடுகளுக்குள் காணப்பட்ட வெனிசுவலா மற்றும் லாவோ ஆகிய இம்முறை அந்த பட்டியலிலிருந்து வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ரயில், பஸ்களில் பயணச் சீட்டுக்கு பதிலாக புதிய கியு.ஆர். முறைமை

ரயில் மற்றும் பஸ் பயணிகளின் வசதி கருதி டிக்கெட்டுக்கு பதிலாக புதிய கியு. ஆர். குறியீடு அறிமுகப்படுத்தப்படும்எனபோக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

சில பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் குறித்த பயணிகள் போக்குவரத்துக் கட்டணத்தை பெற்றுக் கொண்டுடிப்போவுக்குவழங்காத காரணத்தால் இந்த வருடம்இந்தவேலைத்திட்டம் அமுல்படுத்தப்படும் என அமைச்சர் குறிப்பிடுகின்றார்.

ரயிலிலும் இவ்வாறான சம்பவங்கள் நடப்பதால், புதிய தொழில்நுட்ப கியு.ஆர். முறையின் மூலம் தானே பயணச்சீட்டை பெறுவதற்கான அமைப்பு உருவாக்கப்படும் என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

# பெண்ணைத் துன்புறுத்திய கான்ஸ்டபிள் ஒருவர் கைது

சமனலவெள அணைக்கட்டுக்கு சென்றிருந்த 18வயது யுவதியை பாலியல் ரீதியாக துன்புறுத்திய குற்றச்சாட்டில் பொலிஸ்கான்ஸ்டபிள்ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த யுவதி தனது காதலனுடன் அணைக்கட்டு பகுதிக்குச் சென்றுள்ளார், இதன்போது சந்தேகநபரான கான்ஸ்டபிள், காதலனின் கைகளுக்கு கைவிலங்கிட்டு யுவதியை வனப்பகுதிக்கு இழுத்துச் சென்றுள்ளார்.

பின்னர் அங்கு வைத்து குறித்த கான்ஸ்டபிள் யுவதியின் ஆடைகளைக் கழற்றி புகைப்படம் எடுத்து பாலியல் தொல்லை கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

யுவதியைக் காட்டுப் பகுதிக்குள் இழுத்துச் செல்வதைக் கண்ட கிராமவாசி ஒருவர் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்ததையடுத்து, அந்த கான்ஸ்டபிள் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சிக்கும் முன்னர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் ஒலிய பிரதேசத்தைசேர்ந்த38வயதுடையவர் எனவும்ஹம் பேகமுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும்பொலிஸ் கான்ஸ்டபிள் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# புத்தளம் களப்பில் உயிருடன் கரையொதுங்கியது டொல்பின்



புத்தளம் களபுப் பகுதியில்டொல்பின் ஒன்று நேற்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை உயிருடன் கரையொதிங்கியது.

இதன்போது குறித்த பகுதி மீனவர்கள் டொல்பின் ஒன்று உயிருடன் கரையொதிங்கியுள்ளது என வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு தகவல் வழங்கியுள்ளனர்.


இதனையடுத்து குறித்த பகுதிக்கு இலந்தையடி வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சென்று டொல்பினை மீனவர்களின் இயந்திரப் படகின் உதவியுடன் ஆழமான பகுதிக்குக் கொண்டுச் சென்று விடுவித்தனர்.

மேற்படி டொல்பின் போத்தல் மூக்கு டொல்பின் இனத்தைச்சார்ந்தது எனவும் குறித்த டொல்பின் சுமார் 7

அடி நீளமுடையது என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பொல்கஹவெலவில் கார்மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு

## மூவர் கைது



பொலிஸ் உத்தரவை மீறி பயணித்த கார் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்ட சம்பவம் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றுள்ளது.

பொல்கஹவெலவில் குறித்த கார் பயணித்தபோது, பொலிஸார் காரை நிறுத்துமாறு உத்தரவு பிறப்பித்துள்ளனர்.

எனினும் காரின் சாரதி காரை நிறுத்தாமல் சென்றதால் பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் கார் நிறுத்தப்பட்டதுடன் அதிலிருந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# நுகேகொடை பொலிஸ் புலனாய்வுபிரிவு சார்ஜன்ட் கடமையின்போது உயிரிழப்பு

நுகேகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் கடமையில் ஈடுபட்டிருந்தபோதுமாரடைப்பு காரணமாக முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு, பின்னர் உயிரிழந்துள்ளார் என தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹிரிபிட்டிய, பன்னிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்த அஜித் ஆரியசேன என்ற 47 வயதுடைய பொலிஸ் சார்ஜன்ட்டே உயிரிழந்துள்ளார்.

நுகேகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புலனாய்வுப் பிரிவில் கடமையாற்றிய இந்த அதிகாரி தலங்கம பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்தார்.

சனிக்கிழமைகடமைக்கு வந்த இந்த அதிகாரி பொலிஸ் நிலையத்தில் சிறிது நேரம் தங்கியிருந்தபோது ஒருவித ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்துதலங்கம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட அவரை, மேலதிக சிகிச்சைக்காக முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் சேர்க்குமாறு வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். அதனையடுத்து அதிகாரி முல்லேரியா ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.





கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நிறை அளவீட்டு மோசடிகள் தொடர்பில் தெரியப்படுத்துக

பொருத்தமற்ற நிறை அளவீட்டுஉபகரணங்களைப் பயன்படுத்துபவர்களை அறிவிப்பதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பில் திணைக்களத்தின் பணிப்பாளர் தசுஜீவ அக்குரந்திலக்க தெரிவித்ததாவது:

பொருத்தமற்ற நிறை அளவீட்டு உபகரணங்களைப் பயன்படுத்தும் வர்த்தகர்களை அடையாளங்கண்டு அவர்களை அறிவிப்பதற்காக விசேட தொலைபேசி இலக்கமொன்றை அறிமுகப்படுத்து-வதற்கு அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த தொலைபேசி இலக்கம் மூலம் 24 மணி நேரமும் தொடர்புகொண்டு நுகர்வோர் முறைப்பாடுகளை மேற்கொள்ள முடியும். அதன்படி தரமற்ற உணவு மற்றும் அளவிடும் கருவிகளின் தரம் குறித்து 011 218 22 53 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அறிவிக்க முடியும். - என்றார்.







# நலிந்த பிரிவினருக்காக வழங்கப்படும் 14 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தோட்டமக்களுக்கும் வழங்கவேண்டும்

## ஜனாதிபதியிடம் மனோ வலியுறுத்து



குறைந்த வருமானம் பெறும்நலிந்தபிரிவினருக்கு மாதாந்தம் அரசு வழங்க முடிவெடுத்துள்ள 14 ஆயிரம் ரூபாகொடுப்பனவைதோட்டத் தொழிலாளர்களுக்கும் வழங்கவேண்டும் என்று வலியு றுத்ததியுள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவித்ததாவது:

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகியவற்றின் ஆலோசனையுடன் குறைந்தவருமானம்பெரும் நலிந்த பிரிவு குடும்பங்களுக்கு மாதாந்தம் 14 ஆயிரம் ரூபாவை இந்தக் குடும்பங்களது வங்கி கணக்குகள் மூலம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது.

பொருளாதார சீர்திருத்தம் நிகழும் போது, மேன் மேலும் நெருக் கடிக்கு உள்ளாகும் பிரிவினருக்கு இத்தகைய மாதாந்த நலன்புரி கொடுப்பனவு வழங்குவது சரியானது. இது தொடர்பில் அரசையும், உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் ஆகிய இலங்கையின் அபிவிருத்தி பங்காளர்களையும் பாராட்டுகிறேன்.

ஆனால், இந்த நலன்புரி கொடுப்பனவு இலங்கையின் மிகவும் நாளாந்த பிரிவினரான பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கும் கட்டாயமாக வழங்கப்பட வேண்டும்.

பதுளை, கண்டி, நுவரேலியா, கேகாலை, இரத்தினபுரி, கொழும்பின் அவிசாவளை, களுத்துறை, மாத்தளை, காலி, மாத்தறை ஆகியமாவட்டங்களின்பெருந் தோட்டகுடும்பங்களைவழமை போல்ஒதுக்கிவிடுவதைநாம் இம்முறைஏற்கபோவதில்லை.

நாளாந்த சம்பளம் 1,000 ரூபாவாகும். ஆகவே மாதம் 25 ஆயிரம் ரூபா என காகிதத்தில் கணக்கு எழுதி இந்த மக்களைத் தவிர்க்கக்கூடாது. அதேபோல், பெருந் தோட்ட பிரதேசத்தில் தோட்டங்களில்வேலைசெய் யாதோரும் வாழ் கிறார்கள். அவர்களும் குறைந்த வருமானம் பெறும் நலிந்த பிரிவினரே. அவர்களுக்கும் இந்த மாதாந்த நலன்புரி கொடுப்பனவு கிடைக்க வேண்டும்.

மாதாந்தமின்சாரகட்டண பட்டியலில் 1 முதல் 90 வரை அலகுகளை பயன்படுத்துகின்ற குடும்பங்கள், குறைந்த வருமானம் பெரும் நலிந்த பிரிவினராகக்கருதப்படலாம்.

அப்படியானால் அரசியல் தலையீடு இல்லாமல் நியாயமான ஏழை குடும்பங்களுக்கு நலன்புரிக் கொடுப்பனவு கிடைக்க வழி ஏற்படும். இது எனது ஆலோசனை எனத் தெரிவித்துள்ளார்.

# இலங்கையர்களுக்கு ஜப்பானில் அதிகளவில் தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்த உடன்பாடு

ஜப்பானில் இலங்கையர்களுக்குதொழில்வாய்ப்புக் களைஏற்படுத்தும்வகையில் பயிற்சி நிலையங்களை நிறுவுதல் மற்றும் இலங்கை தொழி லாளர்களுக்கு அதிக வருமானம்ஈட்டக்கூடிய அதிக தொழில்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக ஜப்பானிய அரசாங்கத்துடன் இரு தரப்பு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. ஜப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புஅமைச்சர் மனு நாணயக்கார, அந் நாட்டின்உயர்மட்டஇராஜதந்திரிகள் மற்றும் ஆட்சேர்ப்பு நிறுவனங்களின்தலைவர்களை சந்தித்த போதே இதற்கான இணக்கப்பாடுஎட்டப்பட்டதாக அமைச் சர் தெரிவித்தார்.

தாதியர் துறையில் பணியாளர்களை ஆட்சேர்ப்புசெய்வதற்கான நாள்களின் எண்ணிக்கை மற்றும் மையங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் அதிகமான தொழி லாளர்களுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்புகளை வழங்க முடியும் என்றும் அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன்படி, தொழில்தேடுபவர்களுக்குஅந்தபரீட்சைக்குத் 



தோற்றுவதற்கானவாய்ப்பை வழங்க ஜப்பானிய தொழிலாளர் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

# கண்ணீர் அஞ்சலி

வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட
காலம் சென்றவர்களான மகாலிங்கம் உருக்குமணி அம்மா -குமாரசாமி அன்னலட்சுமி,
தம்பதிகளின் பேரன்

## அமரர்
## கனகலிங்கம் இந்திரலிங்கம்



காலம் சென்றவர்களான திரு.திருமதி கனகலிங்கம் இந்திராதேவி தம்பதிகளின் அன்பு மகனும் திரு.திருமதி ஆறுமுகம் மகாலட்சுமி தம்பதியின் அன்பு மருமகனும் திருமதி. தங்கராணி (ராணி - Rani fashion -Toothing) அவர்களின் பாசமிகு கணவரும் ராகவனின் பாசமிகு தந்தையுமாவார்

தியாகலிங்கம் (லண்டன்) சிவாஜிலிங்கம் (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இலங்கை) வசந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு அண்ணவும், திருமதி ஆறுமுகம் சுந்தரலட்சுமியின் மருமகனும், திருமதி. கலாவதி தியாகலிங்கம், மலர்விழி சிவாஜிலிங்கம், பா. ரவீந்திரன், நகுலேஸ்வரன் (நகுலன் - இலங்கை) உதயராணி (தேவி - இலங்கை) மகாதேவ் (Caaveiry Silks -Mitcham ) ஆனந்தநாயகி (ஆனந்தி - லண்டன்) காலம் சென்ற பத்மாவதி (லெப்டினன் கேணல் நளாயினி) தனராஜன்(ராஜன் - கனடா) நவீந்திரன் (நவி - லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். திரு.ம. சங்கரகாந்திலிங்கம் (ஓய்வு பெற்ற அதிபர்) திருமதி. சோ.ராதா ராணி ஆகியோரின் பொறாமகனும், பாலச்சந்திரன் மருமகனும் காலஞ் சென்றவர்களான இராமச்சந்திரன், ஜவஹர்லால் நேரு மோதிலால் நேரு (ஜனாதிபதி சட்டத்தரணி)

செல்வச்சந்திரன், நந்தலால் நேரு ஆகியோரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான திருமதி.ஞா.கமலாதேவி, ப.சரோஜினிதேவி, அ.சொரூபராணி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

தோற்றம்
10.10.1954

மறைவு
02.04.2023

### இறுதிக் கிரியைகள் விபரம்

ஈமக் கிரியைகள் 12.04.2023 புதன்கிழமை அன்று மதியம் 12 மணியிலிருந்து நடைபெறும்.
Tooting & Mitcham Community Sports Club, Imperial files, Bishopford, Modern, Surrey, SM4 6BF

தகனகிரியைகள் 12.04.2023 புதன்கிழமை அன்று பிற்பகல் 3:45 மணியளவில் நடைபெறும்.
Crodon Cermatorium, East Chapel, Mitcham Road, Croydon, Cr9 3AT



இவ்அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தொடர்புகளுக்கு ராணி (மனைவி) 00447507549004, ராகவன் (மகன்) 00447432599679 தியாகலிங்கம் (தம்பி) 00447960033680, சிவாஜிலிங்கம் (தம்பி) 0094777729020, வசந்தினி (தங்கை) 0014163995256, லவன் (சகலன்) 00447917825009




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.04.2023இல் வெளியிடப்பெற்றது.

இத்துடன் நேற்றைய மாலைப்பதிப்பின் பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 04

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 27 திங்கட்கிழமை 10.04.2023 கதிர் 24

## இ.போ.ச. பஸ் மோதி குடும்பஸ்தர் மரணம்

### திருமலையில் சோகம்

திருகோணமலை - கந்தளாய்பிரதானவீதிசர்தாபுர பகுதியில் சைக்கிளுடன், இ.போ.ச. பஸ் மோதியதில் சைக்கிளில் பயணித்த நபர் பலியாகியுள்ளார்.

இந்த விபத்து இன்று காலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலையிலிருந்து பயணித்துக் கொண்டிருந்த இ.போ.ச. பஸ், மஞ்சள்கோட்டைக்கடக்கமுற்பட்ட சைக்கிளுடன் மோதியதாலேயே விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தவிபத்தில்திருகோணமலை சர்தாபுரம் - ஆறாம் கட்டைப் பகுதியைச்

2

## ராஜிதவை வெளியேற்ற குழு நியமிக்கிறார் சஜித்



நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்வதற்காக குழுவொன்றை நியமிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன, ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து இருந்து விரைவில் நீக்கப்படுவார் என வெளியான தகவல்களுக்குப் பதிலளிக்கும் வகையில் மத்தும பண்டார இவ்வாறு கூறியுள்ளார்.

ராஜித சேனாரத்ன ஐக்கிய மக்கள் சக்தியில் தற்போது அங்கம் வகிப்பதால் எந்தப் பயனும் இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

ராஜித சேனாரத்ன விரைவில்அரசுடன் இணைவார்என வும் தெரியவருகின்றது. (02)

## சஜித் கட்சி எம்.பிக்கள் சிலர் புத்தாண்டின் பின்னர் தாவல்




### உறுதிப்படுத்தினார் நளின் பண்டார

**சித்திரைப் புத்தாண்டின் பின்னர் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் அரசுடன் இணைவார்கள்.**

**-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**

**அவர்மேலும்கூறுகையில்,**


**கட்சிதாவல்இடம்பெறவுள்ளதை எங்களால் மறுக்க முடியாது. ஐக்கிய மக்கள் சக்தியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசின் பக்கம் செல்வார்கள்.**

**ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றஉறுப்பினர்ராஜித சேனாரத்ன எப்போதும் கட்சி தாவும் நோக்கத்துடனேயே உள்ளார்.அமைச்சுப்பொறுப்பை ஏற்பது குறித்தும் அவர் ஆர்வமாக உள்ளார்.**

**ராஜித எப்போதும் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவளிக்கும் நோக்கத்துடன் காணப்படுகின்றார்.**

**கட்சி தாவுவது அவருக்குப் பெரிய விடயமல்ல. - என்றார். (02)**

## மே தின நிகழ்வை பிரமாண்டமாக நடத்த ஐக்கிய தேசியக் கட்சி முடிவு




மே தின நிகழ்வுகளை கொழும்பு சுகததாசவிளையாட்ரங்கில் பிரமாண்டமாக நடத்து-வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது. மே முதலாம் திகதி முற்பகல் 10 மணிக்கு ஐ.தே.கவின் மே தினப் பேரணி ஆரம்பமாகும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற கட்சி முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் மே தினக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்வது குறித்து கலந்துரையாடப்பட்டது.

கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தலைமையில் மே தினப் பேரணி ஏற்பாடு செய்யப்படுகின்றது எனவும், சுகததாச விளையாட்ரங்கில் நடைபெறும் மே தினப் பேரணியில் நாடளாவிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநித்துவப்படுத்தும் கட்சியின் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்கள் கலந்து கொள்வார்கள் எனவும் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார். .

கொரோனா நெருக்கடி காரணமாக ஐக்கிய தேசியக் கட்சி கடந்த மூன்று வருடங்களாக மே தினக் கூட்டங்களை நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (02)

## வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு 'மொட்டு' ஆதரவா?

### ரஞ்சித் பண்டார எம்.பி. மழுப்பல்

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கட்சி மட்டத்தில் எவ்வித முடிவும் எடுக்கப்படவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

2024 ஆம் ஆண்டில் தான் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும். அந்தத் தேர்தல் தொடர்பில் எமது கட்சியில் உள்ள சிலர் தனிப்பட்ட ரீதியில் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர். அது கட்சியின் நிலைப்பாடு கிடையாது. இது சம்பந்தமாக கட்சி எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை. - என்றார். (02)

## ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை 2 வாரங்களுக்கு ஒத்திவைப்பு



ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி, முன்னதாக எதிர்வரும் மே 15 ஆம் திகதி, 2022ஆம் ஆண்டுக்கான சாதாரண தரப் பரீட்சையை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டிருந்தது.

இந்தநிலையில், தற்போது குறித்த பரீட்சையை இரண்டு வாரங்களுக்கு ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் மே 29ஆம் திகதி முதல் ஜூன் 8 ஆம்வரைநடைபெறும்என்று பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (02)

## 84 கிலோ கேரள கஞ்சா பொலிகண்டியில் மீட்பு!



யாழ்., வடமராட்சி, பொலிகண்டி கடற்கரையை அண்டிய பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 84 கிலோ கிராம் கேரள கஞ்சா இன்று அதிகாலை கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது.

கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் அவ்விடத்துக்கு விரைந்த கடற்படையினர் கேரள கஞ்சாவை மீட்டுள்ளனர். சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், மேலதிக சட்ட நடவடிக்கைக்காகப் பொலிஸாரிடம் கஞ்சாவைக் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (02)

## வாகன விபத்துக்களால் இவ்வருடம் 564 பேர் பலி



*இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் ஏப்ரல் 8ஆம் திகதி வரை 534 வீதி விபத்துகளில் 564 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.*

*அந்தக் காலப்பகுதியில் வீதி விபத்துக்களில் 1,345 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.*

*மேலும், இந்த விபத்துக்களில் 2 ஆயிரத்து 446 பேர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (02)*

## கணவனை வெட்டி கொலைசெய்த மனைவி



தனது கணவரை வெட்டிப் படுகொலை செய்தார் என்று கூறப்படும் பெண்ணைப் பொலிஸார் கைதுசெய்-துள்ளனர்.

இந்தச் சம்பவம் பொலனறுவை - புலஸ்திகம பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

புலஸ்திகம பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய நபரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இருவருக்கும் இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது என்றும், அதன்போது மனைவி கணவரை வெட்டிப் படுகொலை செய்தார் என்றும் பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த மோதலின் போது காயமடைந்த மனைவியும் புலஸ்திகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காகப் பொலனறுவை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதன்படி சந்தேகநபர் பொலனறுவை வைத்தியசாலையில் பொலிஸ் காவலில், சிகிச்சை பெற்று வருகின்றார். (02)

## மொட்டுக் கட்சி கூறும் 'காகம்' - 'குயில்' கதை




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி என்ற (காகம்) 'கூடு'தான் தம்மைப் பாதுகாத்தது என்பதை இன்று குயில்கள் போல் சுதந்திரமாகச் செயற்படுபவர்கள் மறந்துவிட்டனர். முட்டையிடுவதற்கு மீண்டும்காகத்தின் கூட்டுக்குத் தான் வரவேண்டும் என்பதை இந்தக் குயில் குஞ்சுகள் மறந்துவிடக்கூடாது.

இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் இன்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

அரசில் பதவிகளை வகிக்கும் தமது கட்சியின் சில எம்.பிக்களையும், மொட்டு க் கூட்டணியில் இருந்து வெளியேறிய பங்காளிகளை யும் இலக்கு வைத்தே அவர் இவ்வாறு கூறியுள்ளார். (02)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தில் வெளிப்படைத்தன்மை அறவேயில்லை

### ஐரோப்பிய ஒன்றியம் விசனம்



இலங்கையின் கொடூரமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு மாற்றீடு செய்ய முன்மொழியப்பட்டிருக்கும் சட்டமூலத்தில் வெளிப்படைத்தன்மை இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் டெனில் சைபி இந்த விமர்சனத்தை வெளியிட்டுள்ளார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகைகளை வழங்க வேண்டுமா? இல்லையா? என்பது குறித்து ஐரோப்பிய ஒன்றியம் எடுக்க வேண்டிய முடிவுக்கு முன்னதாகவே இந்தப் புதிய மாற்றுச் சட்டமூலம் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய சட்ட-மூலத்தை ஏற்காது ஜி.எஸ்.பி. பிளஸ் ஏற்பாட்டை ஐரோப்பிய ஒன்றியம் நீடிக்கத் தவறினால், இலங் கைக்கு 500 மில்லியன் டொலர் மதிப்பிலான வர்த்தகச் சலுகை கிடைக்காமல் போகக்கூடும்.

ஐரோப்பிய ஒன் றியம் பயங்கரவாத அமைப்புகளை அடையாளப்படுத்தும் போது நீதித்துறை மற்றும் பொது மக்களது தகவல்களின் அடிப்படையிலான செயல்முறையால் முன்னெடுக்கப்படுகின்றது. எனினும், இலங்கையில், இந்தச் செயல்முறை மிகவும் குறைவான வெளிப்படைத்தன்மையைக் கொண்டுள்ளது என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான தூதுவர் மேலும் தெரிவித்துள்ளார். (02)

# மாமனாரை மிஞ்சிய மருமகன்!

## புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் மிகக் கொடூரமானது என்கிறார் சீ.வீ.கே.



(எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கி புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கர வாத எதிர்ப்புச் சட்டம் மிக மோசமானது என்பது மட்டுமல்லாமல் பல்வேறு பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தான ஒன்றாகவே பல தரப்பினராலும் பார்க்கப்படுகின்றது.

-இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்., கல்வியங்காட்டிலுள்ள அவரது அலுவலகத்தில் இன்று நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பை மீறி சாதாரணமாக மக்களுக்கு இருக்கக்கூடிய உரிமைகளைக் கூட குறைக்கின்ற ஒரு சட்டமாகவே இது காணப்படுகின்றது. கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம், மதச் சுதந்திரம் உள்ளிட்டவற்றைக் குறைக்கின்ற அதேநேரம் இன மற்றும் மத அமைதிக்குப் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியதாக உள்ளது.

முழு நாட்டுக்குமே இது பாதிப்பாக இருந்தாலும் கூட தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அது மிக மிக மோச மான பாதிப்புக்களையே ஏற்படுத்தக் கூடிய பயங்கரமானது.

குறிப்பாக இனவாத ரீதியாக தமிழ் மக்களுக்கு எதிராக இந்தச் சட்டத்தை முழுமையாகப் பாவிக்கலாம் என்ற அச்சம் இருக்கின்றது.

உண்மையில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்க வேண்டும் என்றே நாம் தொடர்ந்து கோரி வருகின்றோம். ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட வெளிநாட்டு அமைப்புக்களும் வெளிநாடுகளும் மற் றுப் உள்நாட்டில் உள்ள அமைப்புகளும் இதனையே கோரியிருந்தன.

ஆனால், இப்போது அந்தச் சட்டத்துக்கு மாறாக அதுவும் அதனை விடவும் ஆபத்தானதும் அச்சுறுத்தலானதுமான ஒரு சட்டத்தைக் கொண்டுவரப் போவதாக ஆட்சியாளர்கள் அறிவித்திருக்கின்றனர்.

எங்களைப் பொறுத்தார் வரையில் இது சர்வதேசத்தையும் நாட்டு மக்களையும் ஏம ாற்றுகின்ற நடவடிக்கையாகத்தான் நாங்கள் பார்க்கிறோம்.

குறிப்பாக ஜே.ஆர். ஜெயவர்த்தன எப்படி முன்னைய சட்டத்தைக் கொண்டு வந்து மக் களை அச்சுறுத்தி அடக்குமுறைகளைச் செய்தாரோ அதை விடவும் மிக மோசம ானதொரு சட்டத்தை இப்போது கொண்டு வர முயல்கின்றனர்.

உண்மையிலா மாமானாரைப் போல் மருமகனாருக்கும் வழி வந்த எண்ணப்பாடா கத் தான் நான் இதனைப் பார்க்கின்றேன்.

இன்றைக்கு ஆட்சியிலுள்ளவர்கள் அந் தச் சட்டத்தைக் கொண்டு வர முயற்சி எடுத்தா லும் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்றார்கள் அதனை நடைமுறைப்படுத்தத்தான் போகின்ற னர். அதனால் எப்போதுமே தமிழ் மக்கள்தான் பல்வேறு பாதிப்புக்களைத் தொடர்ந்தும் எதிர் நோக்கப் போகின்றவர்களா இருப்பார்கள். ஆகையால் இதனை அனைவருமே எதிர்க்க வேண்டும். - என்றார். (02)

## வெடுக்குநாறி ஆதி சிவன் சிலைகள் மீள நிறுவப்படும்

### டக்ளஸ் தெரிவிப்பு

வெடுக்குநாறி ஆதி சிவன் கோவில் பிரச்சினையில் நடந்திருப்பது தவறு. அது யார் செய்திருந்தாலும் தவறு. மீண்டும் வெடுக்குநாறி ஆதி சிவன் கோவிலில் சிலை நிறுவப்படும். அதற்கு ஆளுநருடையதோ பிரதமருடைய அனுமதியோ பெறவேண்டிய அவசியம் இல்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

மட்டக்களப்பு மத்திய வீதியில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் மாவட்ட அமைப்பாளர் சிவானந்தன் தலைமையில் நேற்று (ஞா-யிற்றுக்கிழமை) இடம்பெற்ற கட்சி காரிய-ாலய திறப்பு விழாவில் கட்சி தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக காரியாலயத்தை தி றந்து வைத்த பின்னர் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இன்றைய நிலையில் நாடாளுமன்றத்தில் உள்ள கட்சிகளை தனிப்பட்ட முறையில் அழைத்த போது ஒரு கட்சியை தவிர ஏனைய எதிர்க்கட்சிகள் தேர்தல் வேண்டாம் என முன்வைத்துள்ளனர். தேர்தலுக்கு எதிராக யாரும் செயற்படமாட்டார்கள்.

1990 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலை புலிகள் எதிர்த்தனர். ஆனால் நாங்கள் இதன் ஊடாக பிரச்சனையை தீர்க்க முடியும் எனத் தெரிவித்தோம். அதனை மறுத்து துரோகத்தனம் என்றனர். இன்று என்ன நடந்தது? தன்வினை தன்னைச்சுடும் ஓட்டப்பம் வீட்டை சுடும் என்ற மாதிரி நடந்தி ருக்கின்றது.

நானும் 30 வருடமாக நாடாளுமன்றத்தில் இருந்துவருவதால் எனக்கும் அங்கிருக்கக் கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் உள்ளும் புறமும் தெரியும். எனவே பொருத்தமான நிலையில் தேர்தல் வரும். உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்படும்.

அதேவேளை பயங்கரவாத தடைச் சட்டம் உலகத்திலே எல்லா நாடுகளும் தங்களுடைய நாட்டை முன்னெடுத்துச் செல்வதற்கும் சட்டங்கள் இருக்கின்றன. ஆனால் பெயர்கள் வித்தியாசப்படலாம் இலங்கையில் தமிழ் பேசும் மக்களால் முன்னெடுக்கப்பட்ட விடுதலைப்போராட்டத்தை நசுக்குவதற்காக பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இன்று அந்த நிலைமை இல்லை. ஆனால் நாட்டை நிர்வகிப்பதற்கு சட்டம் தேவை. - என்றார்.

## ஈ.பி.டி.பி. அலுவலகம் மட்டக்களப்பில் திறப்பு







மட்டக்களப்பு மாவட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அலுவலகம் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) திறந்துவைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மத்திய வீதியில் ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் ம ாவட்ட அமைப்பாளர் சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சி தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக காரியாலயத்தை திறந்து வைத்தார்.

கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## உயிரிழந்த நிலையில் காட்டுயானை மீட்பு



மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப்பிரதேசத்தி ற்குட்பட்ட தாந்தாமலைப் பகுதில் உயிரிழந்தநிலையில் காட்டுயானை ஒன்றின் உடல் மீட்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு சுற்றுவட்டார அதிகாரிகள் தெரிவித்தனர்.

தாந்தாமலைப் பகுயியில் அமைந்துள்ள றெட்பாணா வீட்டுத்திட்டம் அமைந்துள்ள நீர் நிலை ஒன்றில் காட்டுயானை ஒன்று வீழ்ந்துகிடப்பதாக அப்பகுதி பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் உடன் விரைந்து யானையை பரிசோதித்ததன் அடிப்படையில் அந்த யானை உயிரிழந்துள்ளதை அவதானித்ததாக அந்த அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த யானை சுமார் 10 தொடக்கம் 15 வயது மதிக்கத்தக்கதாகும். நீதிமன்ற உத்ததவு கிடைக்கப்பெற்றதும் பிரேத பரிசோதனையின் பின்னரே இந்த யானையின் மரணத்துக்கான காரணம் தெரியவரும் என வன ஜீவராசிகள் பாதுகாப்பு சுற்றுவட்டார அதிகாரிகள் மே லும் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டம் படுவாங்கரைப் பிரதேசத்திற்குப்பட்ட பல பகுதிகளிலும் மிக நீண்டகாலமாகவிருந்து காட்டுயானைகளின் அட்டகாசங்களும். தொல்லைகளும், அதி கரித்த வண்ணமேயுள்ளன.

அப்பகுதியில் காட்டுயானைகளின் தாக்கத்தால் பல அப்பாவி உயிர்கள் காவுகொள்ளப்படுவதுவும், பெறுமதியான பயிர்கள். மற்றும் உடைமைகள், வீடுகளும், இவ்வாறு காட்டு யானைகளினால் தினமும் சேதப்படுத்தி வருவதாகவும், அப்பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

## இ.போ.ச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தைய-ான கே.ஏ.வசந்த (வயது 36) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் திருகோண மலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய இ.போ.ச. பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளைச் சீனக்குடா பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றனர். (02)

## மனைவியை அடித்து கொன்றார் கணவன்! அரநாயக்கவில் சம்பவம்

அரநாயக்க - உஸ்ஸாபிட்டிய, அரவ பொல பிரதேசத்தில் தனது மனைவியை கணவன் அடித்துக் கொன்ற சம்பவம் சனிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இக்கொலையுடன் தொடர்புடைய கணவர் நேபொலிஸாரால் கைதுசெய்-யப்பட்டுள்ளார்.

உயிரிழந்த பெண் ஒரு பிள்ளையின் தாய் எனவும், தனிப்பட்ட தகராறு காரணமாக அவரது வீட்டில் இக்கொலை இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## 'சிறகடிக்கும் சிட்டுக்கள்' கௌரவிப்பு நிகழ்வு









(எஸ்.நிதர்ஷன்)

யாழ். கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையின் 'சிறகடிக்கும் சிட்டுக்கள்' எனும் கௌரவிப்பு நிகழ்வு இன்று நடை பெற்றது. பாடசாலையின் அதிபர் கவின்ஜா நவஜீவா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் அ.சிவபாலசுந்தரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

இதன்போது மங்கள வாத்தியங்கள் மற்றும் பாண்ட் வாத்தியங்கள் முழங்க மாலைகள் அணிவிக்கப்பட்டு விருந்தி னர்கள் அழைத்து வரப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஆலய வழிபாடுகளிலும் விருந்தி னர்கள் ஈடுபட்டு மங்கள விளக்கேற்ற லுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகி நடை பெற்றன.

இந்த நிகழ்வில் கௌரவ விருந்தி னராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் முத்து இராதாகிருஷ்ணன், சிறப்பு விருந்தி னராக யாழ்ப்பாணம் வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ப.சசிக்கு மார் மற்றும் பாடசாலையின் பழைய மாணவியும் சட்டத்தரணியுமான சி. ஞான லோஜினி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை, பாடசாலையின் மாணவர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (02)

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


# அதானி குற்றவாளி என்றால் மோடியும் குற்றவாளிதான் முதல்வரின் பிறந்தநாள் விழாவில் ஆ.ராசா எம்.பி. பேச்சு!

அதானி குற்றவாளி என்றால் பிரதம மந்திரியும் குற்றவாளிதான். இதைக் கூறியதற்காக என்னுடைய பதவியைப் பறித்தாலும் பரவாயில்லை. நான் சிறைக்குச் செல்லவும் தயாராக உள்ளேன், என எம்.பி ஆ.ராசா பேசியிருக்கிறார்.

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழக முதல்வரின் 70 ஆவது பிறந்தநாள் விழாப் பொதுக்கூட்டமும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவும் நேற்று நடைபெற்றன. இதில் தி.மு.க. வின் துணைப் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.ராசா கலந்துகொண்டு உரையாற்றியிருந்தார்,

வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது காவிகளோடு தி.மு.க. கூட்டணி வைத்துள்ளது. அப்போது கலைஞர் காவிகளைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார். ஆனால், தற்போதைய முதல்வர் ஸ்டாலினுக்கு முன்னால் பல ஆபத்துக்கள் உள்ளன. இதை யாராலும் மறுக்க முடியாது. உதாரணமாக, ஆட்சிப் பொறுப்பேற்றபோது கொரோனா உச்சகட்டத்தில் இருந்ததால் ஒக்ஸிஜன் தட்டுப்பாடு இருந்தது. அதனை அவர் போக்கினார். அதனைத் தொடர்ந்து வெள்ளம் வந்தது. பத்து தினங்களுக்குள் சென்னையை மீட்டெடுத்தார்.

அதேபோல தேர்தலில் வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டன. ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் வாக்குறுதிகளை நிறைவேற்றி விடுவோம் என்ற நம்பிக்கை இருந்தது. ஆனால், கடந்த ஆட்சியாளர்கள் கஜானாவைக் காலி செய்து விட்டனர் என்பது தெரியவந்தது.

தற்போது அதனைச் சீர் செய்து, கொடுத்த வாக்குறுதியான 1,000 ரூபாய் உரிமைத் தொகையை வழங்குவதற்கும் முதல்வர் ஆணையிட்டுள்ளார். தொடர்ந்து எதிரிகளோடுதான் ஸ்டாலின் களமாடிக் கொண்டிருக்கிறார், என்று ஆ.ராசா தனது உரையில் தெரிவித்திருக்கிறார்.

முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு 80 கோடி ரூபாய் மதிப்பில் பேனா தேவையா? என்று எடப்பாடி கேட்கிறார். அவருக்கு என்ன தகுதி உள்ளது இப்படிக் கேட்பதற்கு? குற்றவாளியான ஜெயலலிதாவிற்கு அவர்கள் நினைவுச் சின்னம் கட்டினர். அதை யாராவது எதிர்த்துக் கேட்டார்களா? ஜெயலலிதா சொத்து வழக்கில் சசிகலாவைப் பலிகடா ஆக்கிவிட்டார்கள்.

நாடாளுமன்றத்தில் பிரதமர் உட்பட அனைத்து அமைச்சர்களும் பா.ஜ.க. வின் எம்.பி.க்களும் உண்மையைப் பேச மறுக்கின்றனர். பொய்யாகத்தான் பேசுகின்றனர். என் மீது 1.76 லட்சம் கோடி ரூபாய் ஊழல் செய்ததாக குற்றம் சுமத்தினார்கள்.

அதற்காக பாராளுமன்றத்தையும் பா.ஜ.க. முடக்கியது. அந்தக் குற்றச்சாட்டின் மீது நீதிமன்றத்தில் நானே நேரடியாக வாதாடி நான் குற்றமற்றவன் என்பதை நிரூ பித்தேன்.

அதே போன்று அதானி விவகாரத்தில் மோடி மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அந்தக் குற்றச்சாட்டிற்கு மோடி பதில் கூறாததன் மர்மம் என்ன? அதானி குற்றவாளி என்றால் மோடியும் குற்றவாளிதான். இதைக் கூறியதற்காக என் மீது வழக்குத் தொடர்ந்து, தண்டனை வாங்கிக் கொடுத்து என்னுடைய பதவியைப் பறித்தாலும் பரவாயில்லை. நான் சிறைக்குச் செல்லத் தயாராக உள்ளேன்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் தமிழ் மொழியையும் மக்களையும் தமிழினத்தையும் காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல், இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களையும் காப்பாற்றுவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார், என்றும் ஆ.ராசா குறிப்பிட்டிருக்கிறார்.



## அடுத்த 5 நாட்களுக்கு இந்தியாவில் வெப்ப அலை தாக்குமென வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை



அடுத்த 5 நாட்களுக்கு இந்தியாவில் வெப்ப அலை தாக்கும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்தியாவின் பல பகுதிகளை இந்த வெப்ப அலை தாக்கவுள்ளது எனவும், இதன் மூலம் வெப்பநிலை 2 பாகை செல்ஸியஸ் முதல் 4 பாகை செல்ஸியஸ் வரை உயர வாய்ப்புள்ளது என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் 5 பாகை செல்ஸியஸ் வரை கூட வெப்பநிலை உயரும் வாய்ப்புகள் உள்ளதாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சத்தீஸ்காில் தெருநாய்கள் கடித்ததில் 5 வயதுச் சிறுமி பரிதாபமாகப் பலி

இந்தியாவின் சத்தீஸ்கர் மாநிலத்தில் தெருநாய்கள் தாக்கியதில் 5 வயதுச் சிறுமி உயிரிழந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



சத்தீஸ்கர் மாநிலத்தின் கொரியா என்ற மாவட்டத்தில் பய்குந்த்பூர் பகுதியைச் சேர்ந்தவர் சுகந்தி. 5 வயதுச் சிறுமியான இவர், கடந்த 7ஆம் திகதி காலை 6 மணி அளவில் இயற்கை உபாதையைக் கழிக்க வீட்டைவிட்டு வெளியே சென்றுள்ளார்.

அப்போது பைகுந்த்பூரில் உள்ள மார்கதர்ன் பள்ளிச் சாலை அருகே, அங்கிருந்த தெரு நாய்கள் சிறுமியைச் சூழ்ந்து கொண்டு தாக்கிக் கடித்துள்

ளன. இதில் சிறுமி கடுமையான காயங்களுக்கு ஆளான நிலையில், தகவல் அறிந்த பெற்றோர் மருத்துவமனைக்குத் தூக்கிச் சென்றனர். ஆனால், சிறுமி உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

தகவல் கிடைத்ததும், பொலிசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். நாய்கள் கடுமையாக தாக்கியதில்தான் சிறுமி உயிரிழந்திருப்பதாக முதற்கட்ட விசாரணை தெரிவிக்கிறது, என பைகுந்த்பூர் கோட்வாலி காவல் நிலைய நிலைய அதிகாரி அஸ்வனி சிங் கூறியுள்ளார். பின்னர், பொலிசார் சிறுமியின் உடலைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து இது குறித்து விசாரணை நடந்து வருகிறது.

இதேபோன்று கடந்த பெப்ரவரி மாதத்தில் ஹைதராபாத் அம்பர்பெட் பகுதியில் பிரதீப் என்ற 5 வயதுச் சிறுவனும், கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் கேரளாவைச் சேர்ந்த 12 வயதுடைய நூராஸ் என்ற சிறுவனும் தெரு நாய்கள் கடித்து இறந்திருந்தனர் என்பது கவனிக்கத்தக்கது.

## உதட்டில் முத்தம் கொடுத்து நாக்கால் தொடச்சொன்ன சம்பவம் மன்னிப்புக்கோரினார் தலாய் லாமா!



பௌத்த மதத்தலைவரான தலாய் லாமா, ஒரு சிறுவனுக்கு வாயில் முத்தம் கொடுத்த காணொளி வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

திபெத்தைச் சேர்ந்த புத்த மதத் தலைவரான தலாய் லாமா, இந்தியாவின் இமாச்சல பிரதேசத்தின் தர்மசாலாவில் தஞ்சமடைந்து வாழ்ந்துவருகிறார்.

இந்த நிலையில் அண்மையில் தன்னிடம் ஆசீர்வாதம் பெற வந்த இந்தியச் சிறுவனின் வாயில் தலாய் லாமா முத்தம் கொடுத்துள்ள காணொளி வெளியாகியுள்ளது.

அத்தோடு சிறுவனின் நாக்கல் தன் நாக்கைத் தொடும்படி அவர் கூறுவதும் காணொளியில் பதிவாகியுள்ளது.

இந்தச் சம்பவம் சமூக வலைத்தளங்களில் வெளியானதையடுத்து, தலாய் லாமாவின் செய்கைக்கு பலரும் கண்டனம் தெரிவித்திருந்தனர். இது சிறுவர்கள் மீதான வன்முறை என்றும். பாலியல் ரீதியிலான அத்துமீறலென்றும் எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன.

இதையடுத்து, தலாய் லாமா அறிக்கையொன்றின் மூலம் நடைபெற்ற சம்பவத்துக்கு மன்னிப்புக் கோரியிருக்கிறார். வழமையாக தான் சந்திக்கும் நபர்களிடத்தில் கள்ளங்கபடமற்ற முறையில் எந்தவித உள்நோக்கமுமின்றி இவ்வாறு விளையாடுவது இயல்பானது என்றும், எனினும் குறித்த சம்பவமானது மனவருத்தத்தை ஏற்படுத்தியிருந்தால், சிறுவன், அவனது குடும்பத்தினர், மற்றும் அவர்களுடைய நண்பர்களிடத்திலும் தான் மன்னிப்பைக் கோருவதாகவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

## பிரான்ஸில் பனிச்சரிவு ஐந்து பேர் உயிரிழப்பு

பிரான்ஸ் நாட்டின் அல்ப்ஸ் மலைத் தொடரின் தென்மேற்குப் பகுதியில் உள்ள மெனன்ட் பிளான்க் என்ற இடத்தில், திடீரென ஏற்பட்ட கடுமையான பனிச்சரிவால் குறைந்தது ஐந்து பேர் உயிரிழந்து, 9 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அதே வேளை ஒருவர் காணாமல் போயுள்ளதாகவும் அவரைத் தேடும் நடவடிக்கைகள் நடைபெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது.

ஈஸ்டர்விடுமுறையைக்கொண்டாடுவதற்காக சுற்றுலாப் பயணிகள் அல்ப்ஸ் மலைப்பகுதியில் குவிந்திருந்த நிலையில், இந்தப் பனிச்சரிவு ஏற்பட்டுள்ளது.



## மாணவர் விசாக் கட்டணம் அதிகரித்தது அமெரிக்கா




சர்வதேச நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள் விசா பெறுவதற்கான கட்டணத்தை அமெரிக்கா அதிகரித்துள்ளது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மாணவர்கள், அமெரிக்காவில் கல்வி பயில்கின்றனர். இந்த நிலையில் அமெரிக்க அரசு, மாணவர்கள் விசா பெறுவதற்கான கட்டணத்தை 25 டொலர்களால் உயர்த்தியுள்ளது.

இதுவரை மாணவர்களுக்கான விசாக் கட்டணம் 160 டொலர்களாக இருந்து-வந்தது. அது தற்போது 185 டொலர்களாக உயர்த்தப்பட்டுள்ளது. இதே போன்று ஒப்பந்த வர்த்தகர்கள், முதலீட்டாளர்களுக்கான விசாக் கட்டணமும் 110 டொலர்களால் அதிகரித்துள்ளது. இந்தக் கட்டண உயர்வு அடுத்த மாதம் 30 ஆம் திகதி முதல் அமலுக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாணவர் எதிர்காலத்துடன் விளையாட்டு வேண்டாம்

உயர் தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணிகளில் ஏற்பட்ட தாமதத்தால் இப்போது சாதாரண தரப் பரீட்சை இரண்டு வாரங்கள் தள்ளிப்போகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. ஒத்திவைக்கப்பட்டிருக்கும் திகதியிலாவது அந்தப் பரீட்சை நடக்கும் என்பதற்கான உத்தரவாதம் ஏதும் இல்லை. ஏனெனில் விடைத்தாள்கள் திருத்தும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான எந்தவொரு நடவடிக்கையும் இதுவரை அரசினால் எடுக்கப்படவில்லை. விரைவில் அதற்கொரு தீர்வைக் காண்பதற்கு ஆசிரியர் சங்கங்களுடன் பேச்சு நடத்த அரசு முன்வரவேண்டும்.

விடைத்தாள்கள் திருத்துவதில் ஏற்படும் தாமதத்திற்கு ஆசிரியர்கள் மீது பழியைப் போடப் பார்க்கின்றார்கள் ஆட்சியாளர்ககள். விடைத்தாள்கள் திருத்துவதற்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டதுடன் போக்குவரத்துக் கொடுப்பனவும் வழங்குவதற்கு இணங்கியிருப்பதை அடுத்து ஆசிரியர்கள் பணிக்கு வரவேண்டும் என்கிற விதத்தில் கருத்துத் தெரிவிக்கும் ஆட்சியாளர்கள் அப்படி வராதது ஆட்சியாளர்களின் தவறு என்று தெரிவிக்க முயற்படுகின்றனர்.

ஆனால் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இதனை மறுக்கிறது. தமது பிரச்சினைகள் குறித்துத் தம்மோடு பேச முன்வராத ஆட்சியாளர்கள் காலதாமதத்திற்குத் தம்மைக் குற்றஞ்சாட்ட முடியாது என்கிறது. உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணி தாமதமாகி மாணவர்கள் பாதிக்கப்படுவதற்குத் தாம் காரணமல்ல என்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் சம்மேளனத்தின் ஊடகப்பேச்சாளர் மூத்த விரிவுரையாளர் சாருத்த இலங்கசிங்க தெரிவித்திருக்கிறார்.

உயர்தரப் பரீட்சைக்கான விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் தொடங்கப்படுவதற்கு முன்னதாகவே பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்க நடவடிக்கைகளை தொடங்குவதாக அறிவித்துவிட்டோம். எனினும், ஆட்சியாளர்கள் அதனை ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. எமது கோரிக்கைகள் தொடர்பில் ஆராயவில்லை. தற்போது உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் செயற்பாடு தாமதமாகின்றமைக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்களை காரணம் காண்பிக்கின்றது இந்த ஆட்சி..

இது தவறானது. விடைத்தாள்கள் திருத்தும் பணிகள் அல்ல பல்கலைக்கழகத்தின் ஏனைய செயற்பாடுகளும் தாமதமாகியுள்ளன. இவை அனைத்துக்கும் நாம் பொறுப்பேற்க முடியாது. ஆட்சியாளர்களே அதனைப் பொறுப்பேற்கவேண்டும். எமது கோரிக்கைகளின் நியாயப்பாடுகள் தொடர்பில் இதுவரையில் ஆட்சியாளர்கள் பொருட்படுத்தி பேச்சுக்களை முன்னெடுப்பதற்குத் தயாராக இல்லை. அதுவே காலதாமதத்திற்குக் காரணம் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

அவர்கள் சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. அவர்களின் பிரச்சினை என்றில்லை, எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கை குறித்தும் ஆட்சியாளர்கள் பேச்சு நடத்தித் தீர்வு காண்பதற்கு முற்படுவதாக இல்லை. ஏற்கனவே ஒரு தடவை பேச்சு நடத்துவதாகக் கூறி தொழிற்சங்கங்கள் ஏமாற்றப்பட்டிருக்கின்றன. அப்போதும்கூட தமது கோரிக்கைகள் தொடர்பில் ஆட்சியாளர்கள் கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை என்றே பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்கள் குற்றஞ்சாட்டியிருந்தன.

ஆட்சியாளர்களின் இந்த வீம்பும் பிடிவாதமும் ஒரு தலைமுறையையே பாதிக்கின்றது என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். விரைவில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களுடன் பேச்சு நடத்தி இந்தப் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்க்க முன்வரவேண்டும். விடைத்தாள்கள் திருத்தும் பணியில் ஆசிரியர் சங்கங்களும் முழுமையான விட்டுக்கொடாத் தன்மையை வெளிப்படுத்தாது. நியாயமுடன் நடந்துகொண்டு மாணவர்களின் எதிர்காலம் பாழாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

இரு தரப்பினருமே சில விட்டுக்கொடுப்புடன் இந்த விடயத்தை அணுகவேண்டும் மாணவர் எதிர்காலம் கருதி.

# யாழ். பல்கலைக்கழக மாணவர் தங்குமிடத்தில் போதைப்பொருள்!

## 17 மாணவர்கள் எச்சரிக்கையின் பின் விடுவிப்பு

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் 17 பேரை, போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாண பொலிஸார் கைது செய்த போது, பீடாதிபதியின் தலையீட்டால், மாணவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது -

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் போதைப் பொருள் வியாபாரி ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில் கொக்குவில் பகுதியில் உள்ள பல்கலைக்கழக மாணவர் விடுதி ஒன்றுக்கும் போதைப்பொருள் விநியோகித்ததாக தெரிவித்துள்ளார்

அதனை அடுத்து குறித்த விடுதியினை நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மாலை பொலிஸார் சுற்றி வளைத்து சோதனையிட்டனர்.

அதன் போது , மாணவர்கள் விடுதியில் இருந்து போதைப் பொருள்கள் மற்றும் போதை மாத்திரைகள் என்பன மீட்கப்பட்டன.

அதனை அடுத்து அங்கு தங்கியிருந்த 15 பெரும்பான்மையின மாணவர்கள் மற்றும் 2 தமிழ் மாணவர்களைப் பொலிஸார் கைது செய்தனர்.

மாணவர்களின் கைது தொடர்பில் பீடாதிபதிக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, பீடாதிபதி மாணவர்களுக்கு தற்போது பரீட்சை நடைபெற்று வருவதாகவும், கைது நடவடிக்கையால் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படும் எனவும் , மாணவர்கள் மத்தியிலான போதைப்பொருள் பாவனை குறித்து பல்கலைக்கழகம் உள்ளக விசாரணைகளை முன்னெடுத்து போதைக்கு அடிமையான மாணவர்களைக் கண்டறிந்து புனர் வாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கும் என பொலி-ஸாருக்கு உறுதி அளித்துள்ளார்.

அதனை அடுத்து விடுதியில் தங்கியிருந்த மாணவர்களை கடுமையாக எச்சரித்து பொலிஸார் விடுவித்தனர்.

# ஓமானியரின் கட்டான ஆடைத்தொழிற்சாலைக்கு விசேட அதிரடிப்படை, பொலிஸார் பாதுகாப்பு!

குழு ஒன்றால் தாக்கப்பட்ட ஓமானியருக்குச் சொந்தமான கட்டானயிலுள்ள ஆடைத் தொழிற்சாலைக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் மேற்பார்வையில் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக படல்கம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், ஆடைத்தொழிற்சாலையை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் அவ்வப்போது கண்காணித்து வருகின்றனர்.

படல்கம பொலிஸ் உத்தியோகத்தர்களும் ஆடைத்தொழிற்சாலையில் 24 மணி நேரமும் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஓமான் முதலீட்டாளர் மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் மீதான தாக்குதல் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் பிணை நிபந்தனைகளை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர் என படல்கம பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# கடற்படையினரின் ரோந்தின்போது கடலில் வீழ்ந்த ரி56 ரக துப்பாக்கி!

தலைமன்னார் கடலில் இந்திய படகுகளைக் கண்காணிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படை சிப்பாய் ஒருவரின் ரி56 ரக துப்பாக்கி கடலில் வீழ்ந்து காணாமல் போயுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் கடற்படை முகாமைச் சேர்ந்த குழுவொன்று கண்காணிப்பு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோதே துப்பாக்கி கடலில் விழுந்துள்ளதாக கூறப்படுகிறது.

இது தொடர்பில் மன்னார் கடற்படை அதிகாரி ஒருவர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

# போலி நாணயத்தாள் வைத்திருந்தமை கடற்படை வீரர் உட்பட மூவர் கைது!

அம்பாறை, இங்கினியாகல பகுதியில் போலி நாணயத்தாள்களுடன் கடற்படை வீரர் உள்ளிட்ட மூவர் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இங்கினியாகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியிலுள்ள மதுபானசாலைக்கு மதுபானம் கொள்வனவு செய்வதற்காக ஓட்டோவில் வருகை தந்த மூவரில் ஒருவர் 5 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாளை வழங்கி மதுபானம் கொள்வனவு செய்து விட்டு அங்கிருந்து தப்பி சென்றுள்ளார்.

இருப்பினும் சந்தேக நபரால் வழங்கப்பட்ட நாணயத்தாள் போலியானது என அறிந்து கொண்ட கடையின் உரிமையாளர் உடனடியாக ஊழியர்கள் இருவரை மோட்டார் சைக்கிளில் அனுப்பி அவர்களைப் பின்தொடருமாறு அறிவுறுத்தியுள்ளார்.

அதற்கமைவாக சந்தேக நபர் களை பின்தொடர்ந்த ஊழியர்கள் அவர்களை மடக்கி பிடித்து பின்னர் பொலிஸ் நிலையத்துக்கு தெரியப்படுத்தியதையடுத்து சந்தேகநபர்கள் மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 23, 25 மற்றும் 26 வயதுடைய நாமல்தலாவ, அம்பாறை பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாவர்.

இதன்போது சந்தேக நபர் ஒருவரிடமிருந்து 5 ஆயிரம் ரூபா பெறுமதியான 4 போலி நாணய தாள்களும் மீட்கப்பட்டுள்ளன. குறித்த சந்தேக நபர் கடற்படையைச் சேர்ந்தவராவார். சந்தேகநபர்கள் அம்பாறை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் இங்கினியாகல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# புத்தாண்டை முன்னிட்டு விசேட பஸ் சேவைகள்!

*புத்தாண்டை முன்னிட்டு தமது சொந்த ஊர்களுக்கு செல்ல எதிர்பார்த்துள்ள மக்களின் வசதிக்காக 4 ஆயிரத்து 768 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என இலங்கை போக்குவரத்து சபை தெரிவித்துள்ளது.*

*கொழும்பு மத்திய பஸ் நிலையத்தில் இருந்து இந்த பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் கூறுகையில் -*

*12 ஆம் திகதி வரை கொழும்பில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு பயணிப்பவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.*

*அத்துடன் 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை வெளி மாவட்டங்களில் இருந்து கொழும்புக்கு பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.*

*இதேவேளை 11 ,12, 13 ஆகிய தினங்களில் மேலதிக பஸ் சேவைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார். புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள் தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.*

# நுவரெலியா ஊடான பிரிட்டன் காலத்து ரயில் பாதை புனரமைக்கப்படவுள்ளது

நானு ஓயாவில் இருந்து நுவரெலியா ஊடாக ராகலை வரையான பிரித்தானிய காலத்துக்குரிய ரயில் பாதையைப் புனரமைப்பதற்குப் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு வெளிநாட்டு முதலீடுகளை நாடவுள்ளதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

31 கிலோமீற்றர் நீளமுள்ள குறித்த ரயில் பாதையானது ஆங்கிலேயர் காலத்தில் அமைக்கப்பட்டது. இருப்பினும், இது வணிக ரீதியாக வெற்றிபெறாததால் பின்னர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களால் கைவிடப்பட்டது.

யநுவீ (கட்டமைத்தல், இயக்குதல், இடமாற்றம்) மாதிரியின் கீழ் இந்தப் பாதையைப் புனரமைப்பதற்கு வருங்கால வெளிநாட்டு முதலீட்டாளர்களிடம் இருந்து ஆர்வத்தை வெளிப்படுத்துமாறு அரசாங்கம் அழைப்பு விடுக்கும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்திருக்கிறார்.

உலகின் ஆறாவது மிக உயரமான ரயில் நிலையமானது கந்தபொலவில் அமைந்துள்ளது எனவும் பந்துல இந்தன் போது குறிப்பிட்டிருந்தார்.

குறித்த புனரமைப்புப் பணியினை மேற்கொள்வதால், சுற்றுலாத்துறை வளர்ச்சி அடைவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன என்றும் பந்துல தெரிவித்திருந்தார்.

# தக்காளி, கத்தரியின் விலைகள் உயர்வு



தக்காளி மற்றும் கத்தரிக்காயின் விலைகள் நேற்று ஞாயிறு முதல் அதிகரித்துள்ளதாக ஹட்டன் பிரதேச மரக்கறி விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நாட்களில் ஏனைய மரக்கறிகளின் விலைகள் கணிசமான அளவில் குறைந்துள்ள நிலையில், கடந்த காலங்களில் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ தக்காளி 250 ரூபாவையும், 200 ரூபாவாக இருந்த கத்திரிக்காய் ஒரு கிலோகிராம் 350 ரூபாவையும் எட்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. பண்டிகைக் காலங்களில் சந்தையில் அதிக கேள்வி நிலவுகின்றமையால் தக்காளி மற்றும் கத்தரிக்காய் ஆகியவற்றின் விலைகள் உயர்ந்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்தனர்.